# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆடி 25 சனிக்கிழமை 10.08.2019 | கதிர் 278


## இனி இது ரகசியம் அல்ல!

நேற்று வல்வெட்டித்துறை நிகழ்வில் உரையாற்றிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. அமைச்சர் மங்கள சமரவீரவை, நாட்டின் தலைவரைத் தீர்மானிப்பதில் பங்களிப்பவர் என்று புகழாரம் சூட்டினார். அது உண்மைதான்.

சந்திரிக்கா பக்கம் 02

# பிரபாகரனுக்குப் புகழாரம் சூட்டினார் சுமந்திரன் எம்.பி.

## வல்வெட்டித்துறையில் அமைச்சர் மங்கள நேற்றுப் பங்கேற்ற நிகழ்வில் இது நடந்தது



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 10

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு நேற்று வல்வெட்டித்துறையில் வைத்துப் புகழாரம் சூட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன். பக்கம் 11

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவே!

### யாழ்ப்பாணத்தில் வைத்து கூறினார் மங்கள சமரவீர


(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 10

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறக்கூடிய வேட்பாளர் சஜித் பிரேமதாஸ என்றுதான் உண்மையில் நாங்கள் நினைக்கின்றோம். பக்கம் 11

## கொக்குவிலில் வீடு புகுந்து வன்முறைக் குழு அடாவடி!

### மோட்டார் சைக்கிள்கள் சேதம்



யாழ்ப்பாணம், ஓக. 10

கொக்குவில் பொற்பதி வீதியில் வீடொன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் அங்குள்ளவர்களை அச்சுறுத்தும் வகையில் வீட்டி பக்கம் 11

## மைத்திரி, ரணில் குடாநாட்டுக்கு அடுத்தடுத்த வாரங்களில் வருவர்

யாழ்ப்பாணம், ஓக. 10

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 15ஆம் திகதியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 23ஆம் திகதியும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றனர்.

இருவரும் இரண்டு நாள்களுக்கு மேல் யாழ்ப்பாணத்தில் தங்கிருப்பர் பக்கம் 11

## முதலில் வேட்பாளர் பின்னரே கூட்டணி!

### சஜித் பிரேமதாஸ விடாப்பிடி

கொழும்பு, ஓக. 10

ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்த பின்னரே புதிய கூட் பக்கம் 11

## மூன்று மாதிரிக் கிராமங்களை மக்களிடம் கையளித்தார் சஜித்



வவுனியா, ஓக. 10

வவுனியாவில் மூன்று மாதிரிக் கிராமங்கள் வீடமைப்பு நிர்மாணத்துறை பக்கம் 11

## கோட்டா தேசத் துரோகியே!

### லக்ஷ்மன் கிரியெல்ல காட்டம்



கொழும்பு, ஓக. 10

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஒரு தேசத் துரோகி என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளுடன் பக்கம் 02

## கூட்டமைப்பு உறுப்பினர்கள் மஹிந்தவைச் சந்தித்து பேச்சு



மட்டக்களப்பு, ஓக. 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் சிலர் நேற்றுக் காலை எதிர்க்கட் பக்கம் 02

## கோட்டாவை எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தயார்!

### அமைச்சர் ரவி கருணாநாயக்க அறிவிப்பு

கொழும்பு, ஓக. 10

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் தயாராகவே உள்ள பக்கம் 11

## தமிழ் மக்களின் வாக்குகள் எனக்கு தேவையில்லை எனக் கூறவில்லை

### கோட்டாபய ராஜபக்ஷ அவசர அறிவிப்பு



கொழும்பு, ஓக. 10

தமிழ் மக்களின் வாக்கு எனக்குத் தேவையில்லையென நான் சொல்லவேயில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி, த.சித்தார்த்தனுடன் நடந்த சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் ஊடகங்களில் தவறாகப் பிரசுரமாகி வருகின்றன. அதை நம்பிவிடாதீர்கள் என முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய பக்கம் 02

## சஜித் பிரேமதாஸவே ஜனாதிபதி வேட்பாளர்

### ஐ.தே.க. பின்வரிசை எம்.பிக்கள் தீர்மானம்

கொழும்பு, ஓக. 10

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாச பெயரிடப்பட வேண்டும் என்று பக்கம் 11




# பலாலி விமானத்தள நுழைவாயில் மேற்குப் பக்கம் திரும்பிய மர்மம்!

## சபையில் கண்டித்தார் டக்ளஸ் எம்.பி.

கொழும்பு, ஓக. 10

பலாலி வீதிக்குக் கிழக்குப் பக்கமாக இதுவரையில் இருந்த பலாலி விமான நிலைய நுழைவாயிலைத் தற்போது மயிலிட்டிப் பக்கமாக – அதாவது மேற்குப் பக்கமாக மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறித்து கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா.

சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இவ்வளவு காலமாக இழுபட்டுக் கொண்டிருந்த பலாலி விமான நிலைய அபிவிருத்தியானது அண்மையில் திடீரெனத் தொடங்கப்பட்டது. விரைவில் பலாலியிருந்து விமான சேவைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் இப்போது கூறப்படுகின்றது. இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவில் மேலும் மேம்பாடுகள் ஏற்படும் என்ற நிலையில் இதனை நாங்கள் மிகவும் வரவேற்கிறோம்.

இதனிடையே பாலாலி வீதிக்குக் கிழக்குப் பக்கமாக இதுவரை இருந்துள்ள பலாலி விமான நிலைய நுழைவாயிலைத் தற்போது மயிலிட்டிப் பக்கமாக –அதாவது மேற்குப் பக்கமாக மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் செயற்பாடானது, எமது மக்களது சொந்தக் காணிகளில் சுமார் 2 ஆயிரம் ஏக்கரையும் அபகரிப்பதற்கான ஒரு திட்டம் என்பது ஒரு விடயமாக இருக்கின்ற நிலையில், மயிலிட்டிப் பக்கமாக நுழைவாயிலைத் திருப்புவதற்கும், ஏற்கனவே மயிலிட்டிக் காணிகள் உள்ளடங்கலாக கடற்கரைப் பகுதியை அமெரிக்கா ஆய்வு செய்திருப்பதற்கும் இடையில் சந்தேகம் எழுகின்றது.

இந்த ஒப்பந்தம் தொடர்பில் பார்க்கின்றபோது, இலங்கையில் அமெரிக்க பாதுகாப்புத் தரப்பினருக்கும், சிவில் பிரஜைகளுக்கும் 1961ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வியான்னா உடன்படிக்கையின் பிரகாரம், தூதுவராலயங்களில் நிர்வாக மற்றும் தொழில்நுட்பச் சபையினருக்கு உரித்தான வரப்பிரசாதங்கள், சலுகைகள் மற்றும் அனுமதிகளை வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாகக்கூறப்பட்டாலும்,இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயம் மேற்படி திட்டத்தின் ஊடாக இலங்கை அரசிடம் கோரியுள்ளதாகத் தெரிய வருகின்ற வரப்பிரசாதங்கள் வேறு வகையாகும்.

அந்த விடயங்களை இங்கே முழுமையாகக் கூறுவதற்கு நேரம் போதாது என எண்ணுகின்றேன். என்றாலும் அமெரிக்க தூதுவராலயம் கோரியுள்ள வரப்பிரசாதங்களை நன்கு ஆராய்கின்றபோது, அவர்கள் இலங்கையில் அமெரிக்கப் படைத்தளமொன்றை அமைப்பதையே கோருகின்றனர் என்பது தெளிவாகின்றது.

அத்தகைய வரப்பிரசாதங்களை வழங்குவதன் ஊடாக இலங்கையின் இறைமை, தேசிய பாதுகாப்பு அனைத்தும் பாரதூரமான நிலைக்குத் தள்ளப்படுவதுடன், இலங்கையின் அண்டைய நாடுகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகள் தொடர்பிலும், அதன் ஊடாக இந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகள் தொடர்பிலும் நாம் சிந்திக்க வேண்டும்.

அமெரிக்கா இலங்கையுடன் மட்டுமல்ல உலகிலேயே நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுடன் இந்த சோபா ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளது என நீங்கள் கூறலாம்.

இந்த ஒப்பந்தம் காரணமாக அந்தந்த நாடுகளிலே இன்றைய நிலையில் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் உருவாக்கி இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத் தேடிக் கொள்வதற்கு அந்த நாடுகளால் இயலாமல் இருப்பதற்குக் காரணம், இந்த சோபா ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் என்றே கூறப்படுகின்றது.

எமது பகுதிகளிலே கிருசாந்திமார், கோணேஸ்வரிகளின் கதைகள் இன்னமும் கண்ணீருடன் நினைவு கூறப்பட்டு வருகின்ற நிலையில், இந்த ஒப்பந்தத்திற்கும் வழிவிட்டால், காலம் பூராகவும் இத்தகைய கண்ணீர்க் கதைகளையே நாங்கள் சுவாசித்துக் கொண்டிருக்க வேண்டி வரும் என்பதையே நான் இங்கு ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கூறுகின்றேன் – என்றார். (ஐ)

## மஹேந்திரனுக்கு பிடியாணை!

கொழும்பு, ஓக. 10

மத்திய வங்கி பிணைமுறி மோசடி வழக்கின் பிரதான சந்தேக நபராக பெயர் குறிப்பிடப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் இருக்கும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மஹேந்திரனைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறு நிரந்தர நீதாய நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பத் அபயக்கோன், சம்பத் விஜயரத்ன மற்றம் சம்பா ஜனாகி ராஜரத்ன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழுவினால் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிடியாணையை ஆங்கிலத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் 10 ஆவது பிரதிவாதியான அஜஹான் கார்திய புஞ்சிஹேவா எனும் நபர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகமல் சிங்கப்பூரில் இருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் எனவே அவருக்கு பிடியாணை பிறப்பிக்குமாறும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் வேண்டி இருந்தார்.

இதனடிப்படையில் அந்த நபருக்கு பிடியாணை பிறப்பித்த நீதிமன்றம் அது தொடர்பிலான அறிக்கை டிசம்பர் 4 ஆம் திகதி முன்னிலைப்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரநாயக்கா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ மைத்திரிபால சிறிசேன போன்றோர் நாட்டின் தலைவர்களாகத் தெரிவானமையில் முக்கிய பங்களிப்பு மங்கள சமரவீரவுக்கும் உண்டு.

இப்போதும் கூட, ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்வதிலும் மங்களவின் பங்களிப்பு முக்கியமாக உண்டு என்பது கண்கூடு.

இந்தக் கூட்டத்தில் தலைவர் பிரபாகரனை பெயர் குறிப்பிடாமல் குறிப்பிட்ட சுமந்திரன், அவரை வல்வெட்டித்துறை உருவாக்கிய ஒரு சாதனையாளன் என்றார்.

ஆனால், அதை விட மங்களவைப் பாராட்டிய அதே தலைப்பில் தலைவர் பிரபாகரனின் சாதனையையும் அவர் குறிப்பிட்டிருக்கலாம். தவற விட்டுவிட்டார்.

'இலங்கையின் தலைவர்களை தீர்மானிப்பதில் முக்கிய பங்களித்தவர்' – என்று மங்கள சமரவீரவுக்குப் புகழாரம் சூட்டிய சுமந்திரன், அந்தக் காலகட்டத்தில் இலங்கையின் – ஒரு சமயம் அயல் நாட்டினதும்கூட – தலைவர்களைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்கியவர் பிரபாகரன் தான் என்பதை மறந்து விட்டார் போலும்.

ஆறு வருடங்கள் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவான பிரேமதாஸாவை அரைவழியில் அகற்றியமையிலிருந்து, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நாட்டின் அடுத்த தலைமைக்கு வரக் கூடியவர்களாக இருந்த காமினி திஸநாயக்க, லலித் அத்துலத் முதலி என்று பலரை நாட்டின் தலைவர்களாகி விடாமல் அப்புறப்படுத்தியமை வரை பிரபாகரனின் காய் நகர்த்தல்கள்தாம் காரணம்.

1994 நவம்பர் மற்றும் 1999 ஒக்டோபர் ஜனாதிபதித் தேர்தல்களில் சந்திரிகா குமாரதுங்க வெல்வதற்கும் –

1999 ஒக்டோபர் மற்றும் 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தல்களில் ரணில் விக்கிரமசிங்க தோற்பதற்கும் –

2005 நவம்பரில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டுவதற்கும் –

நேரடிக் காரணியாகச் செயற்பட்ட சக்தி பிரபாகரன்தான்.

பிரபாகரன் மீதான வெற்றியை வைத்துத்தான் 2010 ஜனவரியில் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியானார்.

1994 இல் சுதந்திரக் கட்சியிடம் பறிகொடுத்த ஜனாதிபதி பதவியை கால் நூற்றாண்டுகள் கடந்தும் ஐ.தே.க. மீளக் பெறமுடியாமல் இருக்கின்றமைக்கும் அவர் தான் காரணம் எனலாம்.

ஒரு சமயத்தில் பாரதப் பிரதமர் பதவியைத் தீர்மானிக்கும் நபராகக் கூட அவர் விளங்கியவர்.

ஒரு வகையில் அந்தக் காலகட்டத்தில் அவர் ஒரு King மட்டுமல்லர், King Maker ஆகவும் இருந்தார்...!

அந்தக் காலம் இப்போது மலையேறிவிட்டது. யார், யாரோ எல்லாம் இப்போது King Maker ஆகிவிட்டார்கள்....!

★ ★ ★

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாளை அறிவிக்கப்படுவார் எனக் கருதப்படும் கோட்டாபய ராஜபக்ஷவைக் கடந்த புதனன்று இரவு சுமார் இரண்டு மணி நேரம் சுமந்திரன் போய் சந்தித்துப் பேசினார் என நேற்று ஓர் இணையத்தளத்தில் செய்தி வெளியாக, அது தமிழ் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

இரண்டு தரப்புகளிலும் விசாரித்துப் பார்த்தேன். சித்தார்த்தன் வந்து கோட்டாபயவைச் சந்தித்தமையை உறுதிப்படுத்திய கோட்டாபய தரப்பு வட்டாரங்கள், சுமந்தரனின் தலைக்கறுப்பு அந்தப் பக்கம் வரவே இல்லை என்றும், கோட்டா – சுமந்திரன் சந்திப்பு என்ற கதை வெறும் "கப்ஸா" என்றும் அடித்துக் கூறின.

*"எங்கிருந்து இப்படியெல்லாம் செய்திகள் முளைக்கின்றன?"* – என்று வியப்புடன் கேட்டார் சுமந்திரன். என்னிடம் பதில் இருக்கவில்லை. நான் சிரித்தேன்.

*"கடந்த தடவை மைத்திரியைக் கொண்டு வருவதற்கு சத்தம் சந்தடியின்றி சிங்கப்பூர் வரை சென்று இரகசிய சந்திப்புக்களை நடத்திய போது அதை மறைத்து வைத்த மாதிரி இப்போதும் மறைக்கின்றீர்களோ என்று பலரும் நம்புவதற்கு இடமுண்டு என்பதை மறந்து விடாதீர்கள்!"* – என்று சுமந்திரனுக்குப் பதில் கூறலாம் என நினைத்தேன். ஆனாலும் கூற வாய் வரவில்லை. விட்டுவிட்டேன்.

**- மின்னல் -**

## எக்னெலிகொட சூட்சுமமாக திட்டமிட்டே படுகொலை!

கொழும்பு, ஓக. 10

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை கடத்திச் சென்று கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை விசாரணை செய்வதற்காக, மூவரடங்கிய ட்ரயல் அட் பார் நீதிபதிகள் குழுவை நியமிக்குமாறு பிரதம நீதியரசரிடம் சட்டமா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஹோமாகம மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரணை செய்வதற்காக இவ்வாறு மூவரடங்கிய நீதிபதிகள் குழுவை நியமிக்குமாறு இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகச் சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளர், அரச சட்டத்தரணி நிரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை கடத்திச் சென்று கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 9 பேருக்கு எதிராக 17 குற்றங்கள் சுமத்துவதற்குப் போதுமான சாட்சிகள் கிடைத்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் குற்றத்தை மிகவும் திட்டமிட்டு சூட்சமமான முறையில் செயற்படுத்தியுள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

### தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில்,

சில அரசியல்வாதிகளுடன் சேர்ந்து போலியான செய்திகளை பரப்பும் ஊடகங்களை நம்பவேண்டாம். சில ஊடகங்கள் போலியான செய்திகளைப் பரப்புகின்றன.

யாழ். மாவட்ட எம்.பி த.சித்தார்த்தனுடன் நடந்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களில் வெளியாகும் கருத்திற்கு எனது கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூவின மக்களின் வாக்கும் எனக்குத் தேவை – என்றார். (ஐ)

### கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கொழும்பு விஜேராம வீதியில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் வாசஸ்தலத்தில் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் சிலரே இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பரவலாகப் பேசப்பட்டு வரும் நிலையில் – பொதுஜன பெரமுன தனது ஜனாதிபதி வேட்பாளரை எதிர்வரும் 11 ஆம் திகதி அறிவிக்கவுள்ள நிலையில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (ஐ)

### கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்து கொள்ளவுள்ள ஒப்பந்தங்களை சபைக்குச் சமர்ப்பிக்கக் கோரி எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்தன நேற்றுக் கொண்டுவந்த சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமெரிக்காவுடன் செய்துகொண்ட பாதுகாப்பு உடன்படிக்கை தேசத்துரோகச் செயல் என்றால் அந்தச் செயற்பாட்டை மேற்கொள்வதற்குக் காரணமாகவிருந்த கோட்டாவும் தேசத்துரோகியே. அத்துடன் ராஜபக்ஷ காலத்தில் செய்துகொண்ட உடன்படிக்கையில் பல மோசமான தன்மைகளை நாம் மாற்றியுள்ளோம். மேலும் நாட்டுக்குத் தேவையான ஆரோக்கியமான உடன்படிக்கைகளையே நாம் தற்போது செய்துள்ளோம் – என்றார். (ஐ)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று



யாழ்ப்பாணம், ஓக.10

இலங்கை இளங் கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தையொட்டி நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் –

இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணி முதல் 7.15 வரை **இசைக்கச்சேரி** –

பாட்டு - புஸ்பநாதன் லதுர்சன், வயலின் – அ.ஜெயராமன், மிருதங்கம் – ப.விக்கினேஸ்வரன் –

7.15 - 8.15 வரை **நிறுத்திய அர்ப்பணம்** (காரைநகர் கிழவன் காடு கலாமன்ற மாணவர்கள்) –

வயலின் – சு.நிறைஞ்சலா, மிருதங்கம் - ப.விக்கினேஸ்வரன். (இ)

## வெல்லாவெளியில் குண்டு மீட்பு

மட்டக்களப்பு வெல்லாவெளிப் பொலிஸ்பிரிவின் கீழ் உள்ள சின்ன வத்தை பொலிஸ் சாவடிக்கு அருகாமையிலுள்ள வாய்க்காலில் இருந்து குண்டு ஒன்றை மீட்டதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் குண்டுஒன்றுகாணப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசியதகவலின்அடிப்படையில் பொலிஸார் சோதனையில் ஈடுபட்டனர். இதன்போதே அப்பகுதியிலிருந்த வாய்க்காலில் இருந்து குண்டைப் பொலிஸார் மீட்டனர். (ஐ)

# வவுனியாவில் அறநெறிப் பாடசாலை திறந்து வைத்தார் சஜித் பிரேமதாஸ

வவுனியா, ஓக. 10

வவுனியா தரணிக்குளம் பால விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை நேற்று அமைச்சர் சஜித் பிரேமதாஸவினால் திறந்து வைக்கப்பட்டது.

தரணிக்குளம் மக்களின் நீண்ட கால தேவையாக அறநெறிப் பாடசாலை காணப்பட்டு வந்தது. இதனைக் கருத்திற்கொண்டு வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சின் 40 இலட்சம் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பால விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை நேற்றுக் காலை அமைச்சர் சஜித் பிரேமதாஸவினால் திறந்து வைக்கப்பட்டது.

தரணிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் இ.ராகுலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா, பிரதேச செயலாளர் கா.உதயராஜா,



உயர் அதிகாரிகள்,, கலாசார உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் அறநெறி ஆசிரியர், ஊர் மக்களெனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# மலரும் புதிய கூட்டணியில் மைத்திரிக்கு உயர் பதவி?

## பொதுஜன பெரமுன பச்சைக்கொடி

கொழும்பு, ஓக. 10

புதிய அரசியல் கூட்டணி மலரும் பட்சத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் பதவியொன்றை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பச்சைக் கொடி காட்டியுள்ளது.

எனினும், பதவி நிலை, அதற்காக பகிரப்படும் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பில் இன்னும் அதிகாரப்பூர்வமான தகவல்கள் வெளியாகவில்லை.


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையிலான சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. இதன்போதும் இந்த விவகாரம் குறித்து தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

கம்போடியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியதும் புதிய கூட்டணி அமைப்பது தொடர்பான இறுதிக் கட்டப் பேச்சுகள் இடம்பெறும் என்றும் தெரியவருகின்றது.



புதிய கூட்டணியில் சம அந்தஸ்து வழங்கப்பட்டால் மாத்திரமே அதில் இணைய முடியும் என சுதந்திரக்கட்சி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொச்சினுக்கான விமானசேவை தற்காலிக இரத்து



கொழும்பு, ஓக. 10

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இந்தியாவின் கொச்சினுக்கு இடம்பெறும் விமான சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முதல் 11 ஆம் திகதி வரை இந்த விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டிருக்கும் என, ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை +914842 362042 என்ற ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் நிறுவனத்தின் கொச்சின் நகர காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளமுடியும்.

கொச்சின் விமான நிலையத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு காரணமாக இந்த விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# கோட்டாபயவுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு!



கொழும்பு, ஓக. 10

ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கும் கோட்டாபய ராஜபக்ஷ, சட்டரீதியற்ற வகையில் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டமை தொடர்பில் சிவில் செயற்பாட்டாளர்கள் இருவர் முறைப்பாடு செய்துள்ளனர்.

பேராசிரியர் சந்ரகுப்த தேனுவர மற்றும் காமினி வியாங்கொட ஆகியோரே பொலிஸ்மா அதிபர் பணிமனையில் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

அமெரிக்காவின் பிரஜாவுரிமையை ரத்துச் செய்த சான்றிதழை சமர்ப்பிக்காமலேயே அவர் இலங்கையின் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டார் எனக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

எனவே இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஜனாதிபதியாகப் போட்டியிடப்போகும் ஒருவர் தெரிந்தே குற்றமிழைப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் முறைப்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்தால் தாம் நடவடிக்கையை எடுத்திருக்க முடியும் என்று அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 10

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தியிலுள்ள திருநெல்வேலி இந்துவாலிபர் சங்க அலுவலகத் தில் ந.சிவகரன் தலைமையில் நடைபெறும்.

# மஹிந்தவின் பதவி போனாலும் அது பற்றிக் கவலை கிடையாது

## கூறுகின்றார் பஸில் ராஜபக்ஷ



கொழும்பு, ஓக. 10

பொதுஜன பெரமுனவின் தலைமைப் பொறுப்பை ஏற்பதால் மஹிந்த ராஜபக்ஷவின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியோ பறிபோகுமானால் அதைப் பற்றி கவலைப்படமாட்டோம் என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைப் பொறுப்பை ஏற்பதால் மஹிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியோ அல்லது எம்.பி. பதவியோ இல்லாமல் போகுமானால் அதைப்பற்றி எமக்குக் கவலையில்லை. மஹிந்த எப்போதும் மக்கள் மனதில் உள்ளார். அவர் மக்கள் தலைவர்.

சர்வதேச ரீதியாக நாங்கள் கடந்த காலங்களில் விட்ட தவறுகளை மீண்டும் செய்ய மாட்டோம். உலக நாடுகள் பலவற்றுடன் இராஜதந்திர ரீதியில் நெருங்கிச் செயற்படுகின்றோம் - என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பேச்சுக்கான முக்கிய கட்டம்

இலங்கை அரசியல் செல்நெறி இந்த ஜனாதிபதித் தேர்தலுடன் தீர்க்கமான பிறிதொரு திசைக்குச் சடுதியாக மாறக் கூடிய ஏதுநிலைகள் தென்படுகின்றன.

அது, தமிழர் தரப்புக்கு பெரும் சாதகங்களற்றதான் – பேராபத்தான – கட்டமாக அமையும் சாத்தியங்களும் அதிகம் உண்டு.

இந்தத் தேர்தலில் களமிறங்கக் கூடிய பிரதான கட்சிகளுள் ஒன்றான பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு யாது என்பது மெல்ல மெல்ல வெட்ட வெளிச்சமாகி வருகின்றது.

அக்கட்சியின் பிரதான தந்திரோபாய வகுப்பாளரான பஸில் ராஜபக்ஷ, தமிழர் தரப்பின் பிரதான கட்சியான தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவின்றியே தாங்கள் வெற்றி பெறுவர் என்று இப்போதே திமிர்த்தனத்துடன் பிரகடனப்படுத்திச் செயற்படத் தொடங்கி விட்டார்.

அக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை அதன் தலைமைப் பொறுப்பை நாளை ஏற்கப் போகின்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை அறிவிக்கவிருக்கின்றார். அது பெரும்பாலும் அவரது சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷவாக இருக்கக் கூடும்.

அவரோ, வரும் தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவின்றியே எங்களினால் வெற்றி பெற முடியும், வெற்றிக்குத் தேவையான வாக்குகளை சிங்களப் பகுதிகளிலேயே தாராளமாகப் பெற்று விடுவேன், ஆனாலும் இலங்கை முழுவதிலிருந்தும் எனக்கு வாக்குகள் கிடைக்கப் பெற்றால்தான் சர்வதேச சமூகம் இலங்கையின் ஜனாதிபதியாகத் என்னை ஏற்றுக் கொள்ளும் என்று கூறியிருக்கின்றார்.

தம்மைச் சந்தித்த புளொட் தலைவர் சித்தார்த்தனிடம் இந்தத் தகவலை அவரே கூறியிருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இத்தகைய பின்புலத்தில் அவர் சித்தார்த்தனிடம் ஒரு முக்கிய கேள்வியை எழுப்பியிருக்கின்றார்.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறத் தாம் விரும்புகின்றார் என்றும், அதற்காக இரா.சம்பந்தனைச் சந்திப்பதற்குத் தாம் தயாராக இருக்கின்றார் என்றும், அவர் தன்னைச் சந்திப்பாரா என்றும் கோட்டாபய சித்தார்த்தனிடம் கேட்டார் என்று கூறப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய தான் என்று முடிவாகி, அதன் பின்னர் தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவைக் கோரும் நோக்கோடு சம்பந்தருடனான சந்திப்புக்கு அவர் அழைப்பு விடுத்தால், என்ன செய் வது என்ற கேள்வி இப்போது கூட்டமைப்புக்குள் எழுவது தவிர்க்க முடியாதது.

*"அப்படி ஒரு நிலைமை வரும்போது பார்க்கலாம்"* – என்று சம்பந்தனின் வழமையான பாணியில் இப்போது பதில் கூறமுடியாது. ஏனென்றால் அந்த நிலைமை கதவைத் தட்டும் வேளை இப்போது நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

இவ்விடயத்தில் பஸில் மற்றும் கோட்டாபய பிரதிபலிக்கின்ற நிலைப்பாட்டைத் தொகுத்து நோக்குகின்றபோது ஒரு விடயம் தெளிவாக விளங்குகின்றது.

தமிழர் தரப்பின் பிரதான கட்சியான தமிழ்க் கூட்டமைப்பின் ஊடான தமிழர்களின் ஆதரவைப் பெறுவதில் அத்தரப்பு தீவிரமாக – முனைப்பாக – இல்லை என்பதுதான் அது. தமிழர் தரப்பை – முக்கியமாக தமிழ்க் கூட்டமைப்புத் தரப்பை – பொது ஜன பெரமுன விட்டேத்தியான பாங்கில்தான் அணுகுகின்றது. ஆதரவு தந்தால் தாருங்கள், இல்லையேல் தேவலை, நாங்கள் எங்கள் வழியைப் பார்த்துக் கொள்கின்றோம் என்ற பாணியிலான தொடர்பாடல் முறைமைதான் அது.

கூட்டமைப்பின் நடவடிக்கைகள், தீர்மானங்களை சம்பந்தன் – சுமந்திரன் தலைமை இதுவரை தமக்குள் முடிவெடுத்து, பிறதரப்புகள் மீது அந்த முடிவுகளை – தீர்மானங்களை – அழுத்தமாகப் பிரயோகித்து வந்தாலும், வரப் போகும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விடயத்தில், எந்த நிலைப்பாட்டை எடுப்பது என்ற விவகாரத்தில் சம்பந்தன் – சுமந்திரன் தரப்பினால் அப்படி எதேச்சாதிகாரமாக முடிவுகளை எடுத்துச் செயற்படுத்தக் கூடியதாக இருக்கும் என நாம் நம்பவில்லை.

பல கொள்கைப் போக்குக் கொண்டவர்களின் கூட்டான தமிழ்க் கூட்டமைப்பு இவ்விடயத்தில் தனக்குள் கருத்து முரண்பட்டு, முட்டிமோதி, ஒரு முடிவுக்கு வர முடியாது முட்டுப்பட்டு நிற்கும் சாத்தியங்களும் தென்படுகின்றன.

இதுவரை காலமும், குறிப்பாக கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றுபட்டு, சங்கமித்து நின்ற கூட்டமைப்பு அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் என்ன செய்யப் போகின்றது என்பதே கேள்வி.

வெற்றி எந்தப் பக்கம் என்று தீர்மானிக்க முடியாத இக்கட்டில் மேற்படி விவகாரத்திலும் தீர்மானம் எடுப்பதும் மிகக் கஷ்டமே.

ஆனாலும், எல்லாத் தரப்புகளுடனும் ஊடாடக் கூடியதாக அனைத்துத் தரப்புகளுக்கும் கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டு வெளிப்படையாக பேசுவதும், காணப்படக் கூடிய இணக்கங்களை தரப்புகள் மீறாமல் செயற்படுத்துவதற்க்கான உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதுமே இவ் விவகாரத்தில் அணுகுமுறையாக இருக்க வேண்டும். அத்தோடு காணப்படக் கூடிய இணக்கங்களை செயற்படுத்தக் கூடிய தகைமை, உறுதி, துணிவு, திடசங்கற்பம் உள்ள தரப்புகளை இனங்காணுவதும் இதில் முக்கியமாகும்.

# நவம்பரில் நீங்கள் சரியான முடிவு எடுத்தால் உங்கள் காலடிக்கே வந்து பிரச்சினைக்கு தீர்வு

## மன்னாரில் அமைச்சர் சஜித் பிரேமதாஸ உறுதி



மன்னார், ஓக. 10

எதிர்வரும் நவம்பர் மாதத்தை நீங்கள் சரியான முறையில் பயன்படுத்தி, சரியான முடிவை எடுப்பீர்களாக இருந்தால் இந்த முடிவு இலங்கை மக்களுக்கும், உங்களுக்கும் சரியான தீர்மானமாக இருக்குமாக இருந்தால் நான் மீண்டும் வந்து மன்னாரில் மாத்திரமல்ல இலங்கையில் இருக்கக்கூடிய ஒட்டு மொத்த வீட்டுப் பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுத் தருவேன் என வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜோசப்வாஸில் நிர்மாணிக்கப்பட்ட 239 ஆவது மாதிரி கிராமமான ஜோசப்வாஸ் நகர் கிராமத்தில் 67 வீடுகளும் 230 ஆவது மாதிரிக் கிராமமான ஜோசப்புரம் மாதிரிக் கிரா மத்தில் அமைக்கப்பட்ட 28 வீடுகள் உள்ளடங் களாக 95 வீடுகள் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் செயலாளர் றிப்கான் பதியுதீன், மன்னார் பிரதேச சபையின் தலைவர் எம்.முஜாகிர், ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ்.எம்.பஸ்மி ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வீடமைப்பு அமைச்சை நான் கடந்த 2015 ஆம் ஆண்டு பொறுப்பெடுத்தேன். நான் அமைச்சைப் பொறுப்பெடுக்கும் போது ஏற்கனவே இருந்தவர்களுக்குக்கூட தெரிந்திருக்கவில்லை இந்த நாட்டிலே எத்தனை நபர்களுக்கு வீடு தேவை என்பது. நான் அனைத்து அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்தேன். இந்த நாட்டிலே காணப்படுகின்ற வீடுகளின் குறைபாடுகளை எனக்குச் சமர்ப்பிக்குமாறு கோரி இருந்தேன்.

அதன் அடிப்படையில் 25 இலட்சம் வீடுகள் தேவைப்படுகின்றமை தெரியவந்தது. 25 இலட்சம் குடும்பங்கள் வீடுகள் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

நாங்கள் உடனடியாக இந்த வீடுகளை அமைப்பதற்கு அடுத்த கட்டமாக ஒரு வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்தோம். எதிர்கால நோக்கத்தோடு, எமது வேலைத்திட்டங்களை நாங்கள் வரிசைப்படுத்தியுள்ளோம்.

முதல் கட்டமாக 2500 வீடுகளையும், 2ஆம் கட்டமாக அடுத்த வருடம் ஜனவரி மாதம் 5 ஆயிரம் வீடுகளையும், 3ஆம் கட்டமாக 10 ஆயிரம் வீடுகளையும் அமைக்க உள்ளோம்.

அதிலே முதல் கட்டமாக 8500 வீடுகளை இம்மாதம் செப்ரெம்பர் மாதம் கட்டி முடிக்கத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் திறமையான அதிகாரிகளின் சிறப்பான கடமையினால் செப்ரெம்பர் மாதம் வரை கொண்டு செல்லாது ஜூலை மாதம் அந்த வீடுகளைக் கட்டி முடித்து விட்டார்கள்.

எனவே நாங்கள் அடுத்த கட்டத்திற்குச் செல்ல இருக்கின்றோம். இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ள அனைத்து வீட்டுத் திட்டங்களையும் துரித கதியில் நிறைவுக்குக் கொண்டு வர இருக்கின்றோம். நவம்பர் மாதம் உங்கள் அனைவருக்கும் ஒரு சவாலான மாதமாக இருக்கின்றது.

நவம்பர் மாதத்தை நீங்கள் சரியான முறையில் பயன்படுத்தி, சரியான முடிவை நீங்கள் எடுப்பீர்களாக இருந்தால் இந்த முடிவு இலங்கை மக்களுக்கும், உங்களுக்கும் சரியான தீர்மானமாக இருக்குமாக இருந்தால், நான் மீண்டும் வந்து மன்னாரில் மாத்திரமல்ல, இலங்கையில் இருக்கக்கூடிய ஒட்டுமொத்த வீட்டுப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பேன்.

ஜனாதிபதி வேட்பாளராக நான் போட்டியிடப் போகின்றேன், அவர் போட்டியிடப் போகின்றார் என கூறுகின்றனர். அவர்களின் குடும்பத்தில் சகோதரர்களை ராஜாவாக்க முற்பட்டார்கள். தற்போது மகனை ராஜாவாக்க முற்படுகின்றார்கள்.


ஒரு காலத்திலே ராஜா வாழக்கூடிய அளவுக்குச் சுகபோக வாழக்கையை நாட்டினுடைய மக்கள் மூலமாக பெற்ற வரிப்பணத்தின் மூலம் வாழ்ந்தார்கள்.

எதிர்வரும் நவம்பர் மாத்ததில் சரியான தீர்மானத்தை எடுத்து எங்களை ஆட்சிக்குக் கொண்டு வரும்பொழுது நான் அவர்களைப் போல் ராஜாவாக நடந்து கொள்ளமாட்டேன். தற்போது உடுத்தியுள்ள இந்த உடையுடன் உங்களைத் தேடி வருவேன். உங்களின் பிரச்சினைகளை அடையாளம் காணுவேன். உங்களுடைய பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வைப் பெற்றுத் தருவேன். நல்ல ஆட்சியை நாடளாவிய ரீதியில் உங்களுக்கு ஏற்படுத்தித் தருவேன்.

எனவே நவம்பர் மாதத்திலே சரியான தீர்மானத்தை எடுங்கள். நாங்கள் மீண்டும் இந்த நாட்டு மக்களுக்காக 24 மணி நேரமும் உழைக்கத் தயாராக இருக்கின்றோம் – என்றார். (ஐ)

# வெள்ளை வான் கலாசாரத்தை நாம் இல்லாது செய்துள்ளோம்

## பிரதமர் ரணில் பெருமிதம்



கொழும்பு, ஓக. 10

நாட்டில் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பி வெள்ளை வான் கலாசாரத்தை இல்லாது செய்துள்ளோம் எனத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதன் காரணமாகவே இன்று அரசின் மீது தொலைக்காட்சி விவாதங்களில் பகிரங்கமாகக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடிவதாகவும் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிடுகையில்,

இந்த மாத இறுதிக்குள் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணி கட்டியெழுப்பப்படும். ஜனநாயகத்தை வலுப்படுத்தி முன்னோக்கிச் செல்வதுடன், புதிய கருத்துகளுடன் கூட்டணி அமைக்கப்படவேண்டும்.

நாட்டில் இன்று கூட்டணி அரசியல் தோற்றம் பெற்றுள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதானமாக மூன்று கூட்டணிகள் உருவாக்கப்படும் – என்றார். (ஐ)

**நாளை** 11.08.2019 ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: மூலம் பி.இ 3.58 வரை
திதி : ஏகாதசி பி.ப 2.02 வரை
இராகுகாலம் : 4.34 – 6.04
சுப நேரம் : 9.04 – 10.34

ஏகாதசி விரதம்

# தாய், தந்தையை இழந்த பிள்ளைகளின் கல்விக்காகப் புலமைப் பரிசில் திட்டம்!

## வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை


**(எஸ்.நிதர்ஷன்)**
**யாழ்ப்பாணம், ஓக. 09**
**வடக்கு மாகாணத்தில் தாய், தந்தை இருவரையும் இழந்த பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காகப் புலமைப் பரிசில் திட்டம் ஒன்றையும், விசேட தேவையுடையோர் மற்றும் பாடசாலை மாணவிகளுக்கான தனிப்பட்ட பஸ் சேவை ஒன்றையும் ஆரம்பிக்கவுள்ளார் என வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.**

இது தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் நேற்று முன்தினம் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் பெற்றோர் அதாவது தாய், தந்தை இருவரையும் இழந்த பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக புலமைப்பரிசில் ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டு அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் 5 மாவட்டங்களிலும் தாய், தந்தையை இழந்த பிள்ளைகள் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு மாவட்ட மட்டத்தில் அந்தத் திட்டம் செயற்படுத்தப்படும்.



அதேபோல் விசேட தேவையுடையோர் மற்றும் பாடசாலை மாணவிகளுக்காக விசேட பஸ் ஒன்றை யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களுக்கிடையில் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விசேட தேவையுடையோருக்கான வசதிகளுடன் கூடிய தாகவும், பாடசாலை மாணவிகள் பாதுகாப்பாகப் பயணிக்க கூடியதாகவும் இந்த பஸ் அமைந்திருக்கும்.

ஆசனங்கள் இல்லாமல், சக்கர நாற்காலியுடன் ஒருவர் அப்படியே பஸ்ஸுக்குள் ஏறி பாதுகாப்பாகப் பயணிக்க கூடிய வகையில் பஸ் அமைந்திருக்கும். இந்த பஸ் சேவையும் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் – என்றார். (ஐ – 07)

---

## அமெ. குடியுரிமையை கைவிட்டதாக கோட்டா இன்னும் அறிவிக்கவில்லை



கொழும்பு, ஓக. 10

அமெரிக்கக் குடியுரிமையைக் கைவிட்டுவிட்டார் என முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ, இதுவரை தனது அமைச்சுக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை என உள்நாட்டு விவகாரங்கள் மற்றும் உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் வஜித அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை தாம் ஆராய்வதாகவும், அவர் கூறினார். (ஐ)

---

## 5,000 கோடி ரூபா செலவில் வடக்கில் 4 செயற் திட்டங்கள்

### மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தகவல்

**(எஸ்.நிதர்ஷன்)**
யாழ்ப்பாணம், ஓக. 09

வடக்கு மாகாணத்தில் சுமார் 5000 கோடி ரூபா செலவில் 4 செயற்றிட்டங்கள் இந்த மாதத்தின் இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன எனக் கூறியிருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், 6 மாதங்களில் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் இந்தச் செயற்றிட்டங்களுக்கான நடவடிக்கைகளை தாம் எடுத்திருப்பதாகவும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீண்ட காலமாக இறுபறி நிலையில் இருந்த பருத்தித்துறை மீன்பிடி துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக மீனவர் சங்கத்துடனும் அருகில் உள்ள பாடசாலையுடனும் பேச்சுக்களை நடத்தி சுமுகமான நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

அந்தத் திட்டமும் வடமராட்சி மற்றும் ஆனையிறவுக் களப்புக்களில் இருந்து குடாநாட்டுக்கான குடிதண்ணீர் பெறும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அத்துடன் வடக்கு மாகாணத்துக்கான கூட்டுறவு வங்கி ஒன்றையும் ஆரம்பிக்கவுள்ளோம். இந்த 4 பெரிய திட்டங்களும் சுமார் 5000 கோடி ரூபா செலவில் இந்த மாதத்தின் இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான நிதியை பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில் நாங்கள் பெற்றிருக்கின்றோம். இந்த பெரும் திட்டங்களையும் கூட பல இடர்பாடுகளுக்கு பின்னரே ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். குறிப்பாக பருத்தித்துறை துறைமுகம் அபிவிருத்தியில் பெரும் பிரச்சினைகள் இருந்தன. அதற்காக பாடசாலைச் சமூகம் மற்றும் மீனவர் சங்கங்களுடன் பல பேச்சுக்களை நடத்தினோம். – என்றார். (ஐ – 07)

---

## வவுனியாவில் மணல் மேடு சரிந்து இரண்டு பேர் வைத்தியசாலையில்

வவுனியா, ஓக. 10

வவுனியா, பாவற்குளத்தில் மணல் அகழ்வின்போது மணல் மேடு சரிந்து விழுந்ததில் இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா, பாவற்குளம் பகுதியில் சிலர் ஆற்றில் மணல் அகழ்ந்து கொண்டிருந்தபோது மணல் மேடு இடிந்து வீழ்ந்தது. அதில் இருவர் அகப்பட்டுள்ளனர். அங்கு நின்றவர்கள் உடனடியாக மண்ணை வாரி எடுத்து இருவரையும் மீட்டனர். இருப்பினும் இருவரும் மண்ணில் அகப்பட்டதால் ஆபத்தான நிலையில் இருந்தனர். இதனையடுத்து இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்தின்போது பாவற்குளம் படிவம் இரண்டைச் சேர்ந்த மீரா முகைதீன் மாக்கின் (வயது – 45), கூடு வெந்தபுலவைச் சேர்ந்த ஏ. ஜே.முனித் (வயது – 28) ஆகிய இருவரே ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

---

## ஆழிக்குமரன் ஆனந்தன் நீச்சல் தடாகத்தை நேற்று திறந்து வைத்தார் அமைச்சர் மங்கள









(எஸ். நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஓக. 10

வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்ட ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவு நீச்சல் தடாகம் நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நீச்சல் தடாகத்தைத் திறந்து வைத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன் மற்றும் மாவை சேனாதிராசா, யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், பிரதேச செயலர்கள் மற்றும் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

2014 ஆம் ஆண்டு நிதி அமைச்சின் நிதித் திட்டத்தின் கீழ் அடிக்கல் நடப்பட்ட இந்த நீச்சல் தடாகமானது நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

# காஷ்மீர் பிரச்சினையில் பாக். சீன உதவியை நாடுகின்றது?

இஸ்லாமாபாத்,ஒக.10

பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி நேற்று முன்தினம் இரவோடு இரவாக சீனாவின் முக்கிய தலைவர்களைச் சந்தித்து இருக்கிறார்.

காஷ்மீருக்கு வழங்கிய சிறப்பு அந்தஸ்தை நீக்குவதாக மத்திய அரசு அறிவித்து உள்ளது. அது மட்டுமில்லாமல் ஜம்மு காஷ்மீரை இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரித்து உள்ளது.



இதையடுத்து இந்தியாவுடன் அனைத்து விதமான உறவுகளையும் நிறுத்திக் கொள்வதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது. இந்தியாவுடன் இனி எந்தவிதமான உறவும் கிடையாது என்று பாகிஸ்தான் கூறியுள்ளது. அதே போல் இதில் தீவிரமான ராஜாங்க நடவடிக்கைகளில் பாகிஸ்தான் இறங்கி உள்ளது.

இந்தக் காஷ்மீர் விடயத்தில் சீனா இதுவரை எந்தவிதமான கருத்தும் தெரிவிக்கவில்லை. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் முக்கியமான ஒரு நாடாக இருக்கும் சீனா இதில் அமைதிகாத்துக்கொண்டு இருந்தது ஏன் என்று பலரும் கேள்வி எழுப்பினார்கள். ஏற்கனவே தன் பங்குக்கும் காஷ்மீரில் ஆக்கிரமிப்பு செய்து இருக்கும் சீனா, இந்தக் காஷ்மீர் பிரிப்பு குறித்து எதுவுமே சொல்லவில்லை.

இந்த நிலையில்தான் தற்போது பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக சீனாவின் முக்கிய தலைவர்களைச் சந்தித்து இருக் கிறார். சீனாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் வாங்லி மற்றும் முக்கிய அரசியல் தலைவர்கள், இராணுவ தளபதியைச் சந்தித்தார்.

நேற்றும் காஷ்மீர் குறித்து இவர்கள் முக்கிய ஆலோசனை நடத்த இருந்தனர். சீனாவின் லடாக் எல்லைக்கும் இவர்கள் செல்ல வாய்ப்புள்ளதாகக் கூறப்பட்டது.

காஷ்மீர் பிரச்சினையில் சீனாவின் உதவியைப் பாகிஸ்தான் நாடும் என்று எல்லோரும் கணித்தனர். தற்போது அவர்களின் கணிப்புப்படியே பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி சீனா சென்றுள்ளார். இதனால் சீனா, காஷ்மீர் பிரச்சினை குறித்து முக்கிய கருத்து தெரிவிக்க வாய்ப்புள்ளது எனக் கூறப்படுகின்றது.

## காஷ்மீர் விவகாரத்துக்கு பதிலடியாக இராணுவ நடவடிக்கையை நாடோம்!

### பாகிஸ்தான் தரப்பில் தெரிவிப்பு

இஸ்லாமாபாத் ஒக.10

காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது தொடர்பாக இராணுவ நடவடிக்கை எடுக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று பாகிஸ்தான் கூறியுள்ளது.

காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு, அந்த மாநிலம் இரு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்படுகின்றன என்று மத்திய அரசு கடந்த திங்கட்கிழமை அறிவித்தது.



மத்திய அரசின் இந்தநடவடிக்கைக்குப் பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்து இருந்தது. இந்தியாவுடன் தூதரக உறவைத் துண்டிப்பதாகவும், இருநாட்டு வர்த்தகத்தைத் தடை செய்வதாகவும் கூறியிருந்தது. இந்தப் பிரச்சினை குறித்து ஐ.நா. உட்பட உலகநாடுகளின் கவனத்துக்குக் கொண்டு செல்வோம் என்றும் கூறியிருந்தது.

இந்நிலையில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மெக்மூத் குரேஷி நிருபர்களிடம் கூறுகையில்-

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்த இந்தியாவின் நடவடிக்கைக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கும் திட்டம் எதுவும் இல்லை. அதற்குப் பதிலாக அரசியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார்.

## காஷ்மீரிலிருந்து 70 தீவிரவாதிகள் விமானத்தின் மூலம் ஆக்ராவுக்கு!

### மத்திய அரசு திடீர் நடவடிக்கை

ஸ்ரீநகர்,ஒக.10

ஜம்மு காஷ்மீரில் இருந்து சுமார் 70 தீவிரவாதிகள் மற்றும் பிரிவினைவாதிகள் சிறப்பு விமானத்தின் மூலம் ஆக்ராவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என வெளியாகியுள்ள தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 370 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

அதன் தொடர் நடவடிக்கையாக, முன்னாள் முதல்வர்கள் பரூக் அப்துல்லா, உமர் அப்துல்லா, மெகபூபா முப்தி உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில் புதிதாக ஓர் அதிரடி தகவல் நேற்று வெளியாகி உள்ளது. அதாவது காஷ்மீர் மாநிலத்தில் இருந்து, செயல்



பட்ட பாகிஸ்தான் ஆதரவு, பிரிவினைவாதிகள் மற்றும் அங்கு சிக்கிய தீவிரவாதிகள் என மொத்தம் 70 பேர் சிறப்பு விமானத்தின் மூலம் காஷ்மீரில் இருந்து ஆக்ராவுக்கு கொண்டு செல்லப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்திய விமானப் படையின் சிறப்பு விமானம் இதற்காக பயன்படுத்தப்பட்டதாகவும், ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## இந்தியா மீதான நடவடிக்கைகள்; மறுபரிசீலனைக்கு பாக். தயாராம்!

இஸ்லாமாபாத்,ஒக.10

காஷ்மீர் தொடர்பான முடிவுகளை இந்தியா மறுபரிசீலனை செய்யத் தயார் என்றால் இந்தியாவுக்கு எதிராகத் தான் எடுத்த நடவடிக்கைகளை மறுபரிசீலனை செயத் தான் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் சொல்கிறது.

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்ததற்கு பதிலடி தருவதற்காக, இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரை புதனன்று பாகிஸ்தான் வெளியேற்றியது. இந்தியாவுடனான தூதரக உறவுகளை குறைத்துக்கொண்டது.

மேலும், இந்தியா-பாகிஸ்தான் இடையிலான சம்ஜாதா எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை பாகிஸ்தான் நேற்று முன் தினம் நிறுத்தி வைத்தது.

இந்நிலையில், இந்த நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்யத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் திடீரென அறிவித்துள்ளது. இதுகுறித்து அந்நாட்டு வெளியுறவுத்துறை மந்திரி ஷா மஹ்மூத் குரேஷி கூறியதாவது:-

காஷ்மீர் தொடர்பான முடிவுகளை அவர்கள் (இந்தியா) மறுபரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறார்களா? அதற்கு சம்மதித்தால், இந்தியாவுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்ய நாங்களும் தயாராக இருக்கிறோம். மறுபரிசீலனை இருதரப்பிலும் நடக்க வேண்டும். சிம்லா ஒப்பந்தம் அப்படித்தான் சொல்கிறது. - இவ்வாறு அவர் கூறினார்.

## வேலூரில் கடும் போட்டிக்கு மத்தியில் தி.மு.க.ஆக 8 ஆயிரம் வாக்குகளினால் வெற்றியீட்டியது



வேலூர் ,ஒக.10

வேலூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு நடைபெற்ற தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் கதிர் ஆனந்த் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர் ஏ.சி.சண்முகத்தைக் கடும்போட்டிக்குப் பின்னர் 8 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற இத்தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன.

வேலூர் ராணிப்பேட்டை பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. ஆரம்பத்தில் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர் ஏ.சி சண்முகம் முன்னிலை பெற்றார்.

பின்னர் தி.மு.க. வேட்பாளர் கதிர் ஆனந்த் முன்னிலை பெற்றார். இவ்வாறு சிறிது நேரம் இரு வரும் மாறி மாறி சில ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றதால் கடும் போட்டி நிலவியது.

ஒருகட்டத்தில் தி.மு.க. வேட்பாளரைவிட ஏ.சி.சண்முகம் 13ஆயிரத்து 250 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்தார். அதன் பின்னர் அவரது வாக்குகள் சரிவதும், உயர்வதுமாக இருந்தது. எனினும் கடைசி சுற்றுகளில் கதிர்ஆனந்த் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றியை உறுதி செய்தார்.

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியின் கீழ் ஆறு சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. அவற்றில் மூன்றில் தி.மு.கவும், எஞ்சிய மூன்றில் அ.தி.மு.கவும் முன்னிலை பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் முடிவுகள் வருமாறு:-

**கதிர் ஆனந்த் (தி.மு.க.) -**
**4 லட்சத்து 85ஆயிரத்து 340 வாக்குகள்**
**ஏ.சி.சண்முகம் (அ.தி.மு.க.) -**
**4 லட்சத்து 77ஆயிரத்து 199 வாக்குகள்**
**தீபலட்சுமி ( நாம் தமிழர் இயக்கம்) -**
**26 ஆயிரத்து 995 வாக்குகள்**

# மெக்ஸிக்கோவில் விஸ்வரூபத்தில் வீசிய சுழற்காற்றினால் அச்சநிலை



மெக்ஸிக்கோவில் வானுக்கும், பூமிக்கும் விஸ்வரூபம் எடுத்த சுழற்காற்று பார்ப்பவர்களை பெரிதும் அச்சுறுத்தியது.

ஸகாடகஸ் (Zacatecas) மாநிலத்தில் உள்ள ஃப்ரஸ்னிலோ (Fresnillo) என்ற இடத்தில் கடந்த சில நாள்களாகவே காற்று அதிகபட்ச வேகத்தில் வீசி வந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் திடீரெனப் புழுதிப் புயலும், சுழற்காற்றும் அதிவேகமாக வீசத் தொடங்கின. அப்போது சுழற்காற்றின் வேகத்தில் தூசு மண்டலம் ஒன்றிணைந்து வானுக்கும், பூமிக்குமாய் விஸ்வரூபம் எடுத்து மணிக்கு 112 கிலோ மீற்றர் வேகத்தில் சுற்றிச் சுழன்றது.

சிவப்பு மற்றும் அரக்கு நிறத்தில் நின்றாடிய சுழற்காற்றைக் கண்டு அப்பகுதி மக்கள் அச்சத்தில் உறைந்தனர்.

## இங்கிலாந்தில் பலூன் திருவிழா



இங்கிலாந்தின் பிரிஸ்டோல் நகரில் இந்த ஆண்டுக்கான சர்வதேச பலூன் திருவிழா தொடங்கி உள்ளது. ஞாயிறு வரை நடக்க உள்ள இப்போட்டியில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் விதவிதமான பலூன்களுடன் கலந்து கொண்டுள்ளனர்.

## மூன்றரை அடி உயர இராட்சதக் கிளி; நியூஸிலாந்தில் புதைபடிவங்கள் மீட்பு!

### 1 கோடியே 90 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவை



வெல்லிங்டன், ஓக.10

நியூஸிலாந்தில் 1 கோடியே 90 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இராட்சதக் கிளியின் புதைபடிவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.


ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பல்கலைக்கழக பேராசிரியரும், புதைபடிவ நிபுணருமான ட்ரெவர் வொர்த்தி, நியூசிலாந்தின் தெற்கு பிராந்தியமான ஒட்டாகோவில் புதைபடிவ ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது அவர் அங்கு 1 கோடியே 90 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இராட்சத கிளியின் புதைபடிவங்களை கண்டெடுத்தார். அந்த கிளியின் உயரம் ஒரு மனிதனின் சராசரி உயரத்தின் பாதிக்கும் மேலானது ஆகும். அதாவது அந்த கிளி சுமார் மூன்றரை அடி உயரத்தில் 7 கிலோ எடையில் இருந்திருக்கும் எனக் கூறப்படுகிறது.

கிளியின் அசாதாரண உயரம் மற்றும் வலிமையை அங்கீகரிக்கும் வகையில் அந்த கிளிக்கு ஹெராக்கிள்ஸ் இன்ஸ்பெக் டேடஸ் என பெயரிட்டுள்ள ஆய்வாளர்கள் அந்த கிளி எப்படி இருந்திருக்கும் என்ற யூகத்தில் ஒரு மாதிரி படம் ஒன்றை வெளியிட்டு உள்ளனர்.

இதுகுறித்து ட்ரெவர் வொர்த்தி கூறுகையில், ஹெராக்கிள்ஸ் இன்ஸ் பெக்டேடசை விட பிரமாண்டமான கிளிகள் உலகில் இருக்க வாய்ப்பு இல்லை. இந்த கிளி இனம் வழக்கமான கிளிகளை விட அதிக உணவுகளை உட்கொண்டு வாழ்ந்திருக்கலாம். ஒருவேளை சக கிளிகளையே அது இரையாக எடுத்திருக்கலாம் என நம்பப்படுகிறது என்றார்.

## நாடாளுமன்றத்துக்கு கைக்குழந்தையுடன் வந்த பெண் எம்.பி.!



நைரோபி, ஓக.10

கென்யா நாடாளுமன்றத்துக்கு கைக்குழந்தையுடன் வந்த பெண் எம்.பி. வெளியேற்றப்பட்டார்.

கென்யா நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருப்பவர் சுலைக்கா ஹசன். 3 குழந்தைகளுக்குத் தாயான இவர் நேற்றுமுன்தினம் தனது 5 மாதக் குழந்தையுடன் நாடாளுமன்றத்துக்கு வந்தார். குழந்தையை அங்கு எடுத்துச் செல்ல அந்நாட்டு சட்டத்தில் அனுமதி இல்லை என்பதால் சுலைக்கா ஹசனை நாடாளுமன்ற காவலர்கள் தடுத்து நிறுத்தினர்.

எனினும் சுலைக்கா ஹசன் காவலர்களை மீறி குழந்தையுடன் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தார். இதை நாடாளுமன்றத்தில் இருந்த ஆண் உறுப்பினர்கள் கடுமையாக விமர்சித்து, எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து, நாடாளுமன்றத் துணை சபாநாயகர் கிறிஸ்டோபர், சுலைக்கா ஹசனை வெளியே செல்லுமாறு உத்தரவிட்டார். வேண்டுமென்றால் குழந்தையை வெளியே யாரிடமாவது ஒப்படைத்துவிட்டு உள்ளே வருமாறு அவர் கூறினார்.

சுலைக்கா ஹசனின் ஆதரவாளர்கள் இந்த நடவடிக்கைக்கு எதிராகக் குரல் எழுப்பினர். எனினும் துணை சபாநாயகர் தனது உத்தரவை திரும்பப்பெற மறுத்தமையால் சுலைக்கா ஹசன் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறினார். இதுகுறித்து நாடாளுமன்றத்துக்கு வெளியே சுலைக்கா ஹசன் கூறும்போது, நான் என் குழந்தையை முடிந்த அளவு நாடாளுமன்றத்துக்கு அழைத்து வரக்கூடாது என்றுதான் முயற்சித்தேன். ஆனால் இன்று என்னால் அதைத் தவிர்க்க முடியவில்லை என்றார்.

மேலும் இதுகுறித்து அவர் கூறுகையில், ஒருவேளை நாடாளுமன்றத்தில் குழந்தைகளை பார்த்துக்கொள்ள கூடிய காப்பகம் இருந்தால் நான் குழந்தையை அங்கு விட்டிருப்பேன். இந்த நாட்டில் வேலைக்குச் செல்லும் அனைத்துப் பெண்களும் இந்த துயரத்தை எதிர்கொள்கிறார்கள். எல்லோராலும் குழந்தையை பார்த்துக்கொள்ள பணியாள்களை வைத்துக்கொள்ள முடியாது. தனியார் நிறுவனங்களில் குழந்தைகளை பார்த்துக்கொள்வதற்கான வசதிகள் உள்ளன. நாட்டின் உயர்ந்த சட்ட அமைப்பான நாடாளுமன்றம் இதுபோன்ற விஷயங்களுக்கு முன் உதாரணமாக இருக்க வேண்டும் எனக் கூறினார்.

## பாக். அதிகாரிகளுக்கான கட்டுப்பாடுகளை நீக்கியது அமெ.

பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளுக்கு கடந்த ஆண்டு விதித்திருந்த கட்டுப்பாடுகளை அமெரிக்கா நீக்கியுள்ளது.

பாகிஸ்தானில் பதற்றம் நிறைந்த பழங்குடியினர் பகுதிகளுக்கும், கராச்சி நகருக்கும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் செல்வதற்கு அந்த நாட்டு அரசு கடந்த ஆண்டு தடை விதித்தது.

அதற்குப் பதிலடியாக, தங்கள் நாட்டுக்கான பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள், அவர்கள் பணியாற்றும் நகரங்களுக்கு 40 கி.மீ. தொலைவுக்கு மேல் பயணம் செய்ய அமெரிக்காவும் தடை விதித்தது.

மேலும், வேறு நகரங்களுக்குச் செல்ல அந்த அதிகாரிகள் விரும்பினால், அதற்காக 5 நாள்களுக்கு முன்னரே வெளியுறவுத்துறை அமைச்சகத்திடம் அனுமதி பெற வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.



அதனைத் தொடர்ந்து, அமெரிக்காவிலுள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சிறப்பு வரிச் சலுகைகள் அனைத்தும் ரத்து செய்யப்படுகின்றன என அமெரிக்கா கடந்த மே மாதம் அறிவித்தது.

இந்த நிலையில், பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை அமெரிக்கா நீக்கியதாக, தி டான்' நாளிதழ் தெரிவித்துள்ளது.


தங்கள் நாட்டிலுள்ள அமெரிக்கத் தூதர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை பாகிஸ்தானும் நீக்கியுள்ளதாக அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.

அந்த நாட்டுப் பிரதமர் இம்ரான் கான் கடந்த மாதம் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட நிலையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

எனினும், இதுகுறித்து பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சகம் இதுவரை எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

## 92 வயது நாஜி நபரிடம் போர்க் குற்ற விசாரணை

இரண்டாம் உலகப் போரின்போது, போலந்திலுள்ள டான்ஸிக் நகரில் இயங்கி வந்த ஜேர்மனியின் நாஜி வதை முகாமின் பாதுகாவலராகப் பணியாற்றிய புரூனோ டே (வயது 92) என்பவர் மீது போர்க் குற்ற விசாரணை நடத்த ஜேர்மன் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.



அவரால் 2 மணிநேரம் வரை அமர்ந்து விசாரணைகளுக்குப் பதிலளிக்க முடியும் என்று மருத்துவர்கள் சான்றளித்தமையைத் தொடர்ந்து இந்த அனுமதி அளிக்கப்பட்டது.

டான்ஸிக் வதை முகாமில் 60,000-இற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அங்கு பாதுகாவலராகப் பணியாற்றியதன் மூலம் அதில் 5,230 படுகொலைக்குக் காரணமாக இருந்தார் என புரூனோ டே மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## துருக்கியில் நிலநடுக்கம் 23 பேர் காயம்

துருக்கியில் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் 23 பேர் காயமடைந்தனர். ரிக்டர் அளவுகோலில் 6 அலகுகளாகப் பதிவான அந்த நிலநடுக்கம், அந்த நாட்டின் டெனிஸ்லி மாகாணம், போஸ்கார்ட் நகரில், உள்ளூர் நேரப்படி மதியம் 2.25 மணிக்கு ஏற்பட்டதாகப் பேரிடர் மற்றும் அவசரநிலை மேலாண்மை அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் காரணமாக டெனிஸ்லி மாகாணத்தைச் சுற்றிலும் உள்ள சில வீடுகள் இடிந்து விழுந்தன எனவும், இதில் 23 பேர் காயமடைந்தனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மனதில் வெறுப்பும் வன்மமும்

# இளைஞர்கள் மத்தியில் வன்முறை கலாசாரம்!

இந்தக் கட்டுரையாளர் தமிழகத்தை மையமாக வைத்து எழுதியிருந்தாலும் கூட, இது நம் நாட்டுக்கும் – குறிப்பாக வடக்கு மாகாணத்துக்கு – யாழ். குடாநாட்டு இளைஞர்களுக்கு – மிக மிக ஏற்புடையதாக உள்ளது. இதனை எம்மவர்களும் கருத்தில் எடுத்து வன்முறைகள் அற்ற சமூகம் உருவாக வழிகாட்டுவோம்.

**சிவபாலன் இளங்கோவன்**



எந்த ஒரு விஷயத்தையும் சுயஅறிவின் வழி அணுகாமல், உடனடியான உணர்வெழுச்சியின் வழியாக அணுகும் போக்கு இன்றைய இளைஞர்களிடம் மிகவும் அதிகமாகியிருக்கிறது. இளைஞர்களின் மனதில் வெறுப்பும் வன்மமும் மிகச் சுலபமாக விதைக்கப்படுகிறது. அந்த வெறுப்பையும் வன்மத்தையும் வெவ்வேறு தருணங்களில் அவர்கள் வெளிப்படுத்திக் கொண்டே செல்கிறார்கள். அதுவும் கும்பலாகக் கூடிவிட்டால், அந்த வெறுப்பு விஸ்வரூபம் எடுக்கிறது. அதன் வெளிப்பாடுகளைத்தான் நாம் அவ்வப்போது பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதில் ஒன்றுதான், சமீபத்தில் சாலையில் அரிவாள்களோடு பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்ட சம்பவம்.

மாணவர்களிடையே பரவும் வன்முறைக் கலாசாரத்தையும் ஆயுதப் புழக்கங்களையும் நாம் மேற்கத்திய நாடுகளில்தான் அதிகம் பார்த்திருக்கிறோம். ஆனால், சமீப காலங்களில் வெவ்வேறு வடிவங்களில் அது நம்மைச் சுற்றி நடக்கத் தொடங்கியிருக்கிறது. ஒருவிசாலமானபார்வையோ இலட்சியமோ சுயசிந்தனையோ இல்லாத இளைஞர்களின் உணர்வுகளை மிகச் சுலபமாகத் தூண்ட முடியும். ஒரு காய்ந்த தீக்குச்சிபோல அவர்களின் உணர்வுகள் எப்போதும் பற்றி எரியத் தயாராகவே இருக்கின்றன. அந்த அதீத உணர்வெழுச்சியை நெறிப்படுத்தவும் கட்டுக்குள் வைக்கவும் ஒரு சமூகம் தன்னளவில் தயாராக இருக்க வேண்டும். அப்படி இல்லை என்பதுதான் இங்கே துரதிர்ஷ்டவசமானது.

### சினிமா எனும் அபாயம்

கடந்த காலங்களில் இளைஞர்களின் உணர்வெழுச்சியை நேர்மறையான வழிகளில் நெறிப்படுத்துவதற்கு ஆளுமைகள் இருந்தார்கள். அந்த ஆளுமைகளுக்கும் இளைஞர்களுக்கும் இருந்த இணக்கமும் தொடர் உரையாடல்களும் அவர்களை மிகக் கவனமாகக் கையாள உதவின. இளைஞர்களின் இந்த அதீத உணர்வெழுச்சியை ஆக்கபூர்வமான விஷயங்களுக்கு மடைமாற்றி அதைச் சமூகத்தின் வளர்ச்சிக்குப் பயன்படும்படி மாற்றிக்கொண்டார்கள். ஆனால், இன்று நிலைமை அப்படி இல்லாததன் விளைவாக இளைஞர்களின் அத்தனை கவனத்தையும் சினிமாவும் இணைய ஊடகமும் முழுமையாகத் தங்கள் பக்கம் ஈர்த்துக்கொண்டன.

இதையெல்லாம் சினிமா பொறுப்புடன் அல்லவா கையாண்டிருக்க வேண்டும்? ஆனால், அதைச் செய்யத் தவறியது மட்டுமின்றி, வன்முறையை அத்தனைக்குமான தீர்வாக மிகைப்படுத்தியும் விட்டது. எந்த ஒரு பிரச்சினைக்கும் அறத்தின் வழியும், அஹிம்சையின் வழியும் நின்று தீர்ப்பதை சினிமாவின் கதாநாயக பிம்பங்கள் ஒருபோதும் செய்வதில்லை. சினிமா கதாநாயகர்களைத் தங்களின் ஆதர்ச பிம்பமாக உள்வாங்கிக்கொள்ளும் இளைஞர்களோ வன்முறையை நியாயப்படுத்தும் அவர்களின் போக்கையும் சேர்த்தே உள்வாங்கிக் கொள்கிறார்கள்.

சமீபத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில், கல்லூரி மாணவர்களிடம் நெறியாளர் சில கேள்விகளைக் கேட்டார்: ‘பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?’, ‘அரசியலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?’, ‘இந்தச் சமூகத்தில் இளைஞர்களாகிய உங்களின் பங்கு என்ன?’ அதற்கான அவர்களின் பதில்களைப் பார்த்து எனக்குள் ஓர் அச்சம் தொற்றிக்கொண்டது. ‘பெண்கள் என்றால் ஆண்களை ஏமாற்றுபவர்கள்’, ‘அரசியல் என்றால் ஊழல்’, ‘சமூகமா? அப்படி என்றால் என்ன?’ இப்படித்தான் இருந்தது அவர்களின் பதில். இன்னும் சில பேர் ‘நோ கமெண்ட்ஸ்’ என்பதைப் பதிலாகத் தந்தார்கள். இந்த பதில்களில் ஒளிந்திருக்கிறது நமது இளைய சமூகத்தின் உண்மையான முகம். அவர்களிடம் எதைப் பற்றியும் ஒரு தெளிவான பார்வை இல்லை, அவர்களுக்கென்று ஒரு கருத்து இல்லை, தனிப்பட்ட விஷயங்களுக்குக்கூட சொந்தமாக அபிப்பிராயங்கள் இல்லை. சுயசிந்தனை அற்றவர்களாகவே பெருங்கூட்டம் இருக்கிறது. அவர்களுடைய கருத்தாக வெளிப்பட்டது அத்தனையும் சினிமா வசனங்கள்தான். சினிமா அவர்களது சிந்தனையை முழுவதுமாக ஆக்கிரமித்திருக்கிறது.

## சினிமா நாயகர்கள் போல் நினைத்து கத்தி,வாள்களை கையில் எடுக்கும் இன்றைய எங்கள் மண்ணின் இளசுகள்!!

### அசட்டுத்தனங்களில் திளைக்கும் இளைஞர்கள்

அவர்களிடம் சென்று ‘உங்களுக்குப் பிடித்தது எது?’ என்று கேட்டால்கூட அவர்களுக்குத் தெரியாது. எதைச் சொன்னால் மற்றவர்களுக்குப் பிடிக்குமோ அதையே தனக்குப் பிடித்ததாகச் சொல்வார்கள். தன்னைப் பற்றியோ, தன்னைச் சுற்றியுள்ளவர்களைப் பற்றியோ, சமூகத்தைப் பற்றியோ அவர்களிடம் எந்தப் புரிதலும் இல்லை. அவர்களது நடவடிக்கைகளை அந்தந்த நாளே தீர்மானிக்கின்றன. கேளிக்கைகளையும் வெற்று கவனஈர்ப்பையும் தவிர, அவர்களின் அன்றாட வாழ்வில் வேறு எதுவுமில்லை.

போதைப் பொருள்கள், விலையுயர்ந்த மோட்டார் சைக்கிள், வித்தியாசமான சிகை அலங்காரம் போன்ற அசட்டுத்தனங்களில் அவர்கள் ஈடுபடுவதுகூட கவனம்ஈர்க்கும் ஓர் உத்தியே. தான் சார்ந்த குழுவின் மைய கவனத்தைத் தன் பக்கம் திருப்புவதன் மூலம் தனது சுயத்தை நிரூபிக்கும் அங்கீகார வெறி மட்டுமே அவர்களிடம் இருக்கிறது. அதன் பிறகு கிடைத்த இந்த அடையாளத்தைத் தக்கவைப்பதற்காகத் தன்னை ஒரு வீரதீர ஆண்மகனாகச் சித்திரிக்க விரும்புகிறார்கள். அதற்காக இவை போன்ற வன்முறைச் சம்பவங்களை உருவாக்கிக் கொண்டு அதில் அணி திரள்கிறார்கள். தன்னை முன்னிறுத்துவதும், தனது அதிகாரத்தன்மையை நிறுவுவதும் மட்டுமே இந்தச் சம்பவங்களின் அடிப்படை நோக்கம்.



### கட்டற்ற சுதந்திரத்தின் ஊறு

சமூகத்திலிருந்து இன்றைய இளைஞர்களில் சிலர் விலகி தங்களை மட்டும் தனியொரு அதிகாரமாகக் காட்ட முற்படுவதும், சகமனிதர்களின் மீதான கரிசனங்களும் அறவுணர்ச்சியும் குறைந்துபோயிருப்பதும்தான் இளைஞர்களுக்கிடையே ஊடுருவியிருக்கும் வன்முறைக் கலாசாரத்துக்கான அடிப்படை உளவியல்.

பதின்ம வயதில் ஓர் இளைஞரின் பார்வையில் அவருக்கென்று இருக்க வேண்டிய சுதந்திரங்கள் ஓரளவு நியாயமானதாகத் தெரிந்தாலும்கூட வாழ்க்கை நெறிமுறைகளும் கட்டுப்பாடுகளும் இந்த ‘கட்டற்ற சுதந்திரம்’ என்பதால் புறந்தள்ளப்பட்டிருப்பது ஆரோக்கியமானதல்ல. ‘சுதந்திரம்’ என்பதை முற்றிலும் தங்களுக்குச் சாதகமானதாக மாற்றிக் கொண்டிருப்பது மற்றவர்களுக்கு மோசமான முன்னுதாரணங்களாகவே மாறிக் கொண்டிருக்கின்றன.

நமது இளைஞர்களில் சிலர் நிச்சயம் தடம் மாறிக் கொண்டிருக்கிறார்கள். இலட்சியவாத எண்ணங்களோ எதிர்காலக் கனவுகளோ அவர்களுக்கு இல்லை. சிறு தோல்வியையும் அவமானங்களையும் வலியையும் தாங்குவதற்குக்கூட அவர்கள் தயாராக இல்லை. சகிப்புத் தன்மை குறைந்திருக்கிறது. இதன் பின்னணியில் பல சமூக, பொருளாதார, அரசியல் காரணங்கள் இருக்கலாம். ஆனால், அவை அத்தனையிலிருந்தும் இளைஞர்களை மீட்டெடுப்பது மிக அவசியமான ஒன்று.

இளைஞர்களிடம் இந்த வன்முறைக் கலாசாரம் பரவிவருவதையும், அது சார்ந்த குற்றவுணர்ச்சி கொஞ்சமும் இல்லாததையும் நாம் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நாம் பச்சையப்பன் கல்லூரி சம்பவத்தை வெறும் அந்த மாணவர்களின் பிரச்சினையாக மட்டும் பார்க்கக் கூடாது. அப்படி நினைத்துக் கொண்டு, அவர்கள் கழிப்பறையில் வழுக்கி விழுவதைக் கைதட்டி ரசித்துக் கொண்டிருக்கிறோம்.

உண்மையில், வழுக்கி விழுவது அவர்கள் அல்லர்; ஒரு பக்குவப்பட்ட, அறிவார்ந்த எதிர்காலத் தலைமுறையை உருவாக்கும் பொறுப்பிலிருந்து நாம்தான் வழுக்கி விழுகிறோம்.

நன்றி - இந்து தமிழ்



# 30 தன்னார்வ ஆங்கில ஆசிரியர்களை இலங்கைக்கு அனுப்புகின்றது அமெ.

கொழும்பு, ஓக. 10

அமெரிக்கஅரசுஅடுத்தஆண்டு முதல் 30 தன்னார்வ ஆங்கில ஆசிரியர்களை இலங்கைக்கு அனுப்பும் என எதிர்பார்ப்பதாகக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸுடனான சந்திப்பின்போதே இந்தமுடிவுஎட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் நேற்றுமுன்தினம் கூறினார்.

அத்தோடு இந்த முயற்சி தொடர்பாகஅமைச்சுக்கும்அமெரிக்கத்தூதரகத்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட உள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாறு வரும் தன்னார்வ ஆசிரியர்கள் கிராமப்புறப் பாடசாலைகள் உள்ள மாணவர்களின் மொழியியல் அறிவை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கு ஆங்கிலத்தை கற்பிக்கப் பயன்படுத்தப்படுவார்கள் என்றும் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கூறியுள்ளார். (ஐ)

# கம்போடியா பிரதமரை சந்தித்தார் மைத்திரிபால






நாம்பென், ஓக. 10

கம்போடியா நாட்டுக்கான அரசமுறைப் பயணமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கம்போடிய பிரதமர் சம்டெக் ஆக்கா மோகா சேனாபக்டெய் ரெக்கோ ஹுன் சென் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

கம்போடியப் பிரதமரின் உத்தியோகபூர்வ அலுவலகமான பீஸ் பலஸில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், கம்போடிய பிரதமர் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பளித்தார்.

நீண்ட காலமாக இரு நாடுகளுக்கிடையே காணப்படும் மத, கலாசார உறவுகளை நினைவு கூர்ந்த அந்நாட்டு பிரதமர் அந்த உறவை அடிப்படையாகக் கொண்டு இருநாடுகளுக்கிடையிலான சுற்றுலா மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கிடையிலான நேரடி விமான சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், எதிர்காலத்தில் சிவில் விமான சேவைகள் தொடர்பிலான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நீண்ட காலமாக இரு நாடுகளுக்கிடையே நெருங்கிய தொடர்புகள் காணப்பட்ட போதிலும் இதுவரை இரு நாடுகளிலும் தூதுவராலயங்கள் ஸ்தாபிக்கப்படாமையைக் கருத்திற்கொண்டு அவற்றை துரிதமாக அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

உள்நாட்டுச் சந்தை வாய்ப்புக்கள் மற்றும் நன்மைகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் விரிவான கவனம் செலுத்தப்பட்டதுடன், முதலீட்டு பாதுகாப்புக்காக சட்டபூர்வமான அடித்தளம் அமைக்கப்பட வேண்டியதன் தேவையை வலியுறுத்திய ஜனாதிபதி, எந்தவொரு நாடும் மற்றுமொரு நாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடாதென்பதே தனது வெளிநாட்டுக் கொள்கை என்பதையும் தெளிவுபடுத்தினார்.

ஆசியான் அமைப்பின் பிரதான உறுப்பு நாடாகிய கம்போடியாவுடன் இலங்கையின் நட்புறவை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, இரு நாடுகளும் பிரிந்திருக்கின்றமை பெரும் நட்டம் என்பதும் தூதுவராலய தொடர்புகளை வலுவூட்டுவதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு பணிப்புரை விடுப்பதாகவும் தெரிவித்தார்.

அதிகளவிலான கம்போடியா நாட்டின் பிக்குகள் இலங்கையில் கல்வி கற்று வருவதுடன், அதற்காக வழங்கப்பட்டுள்ள வசதிகளுக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த கம்போடிய பிரதமர், மத, கலாசார பின்புலத்தையுடைய இரு நாடுகளுக்கிடையிலான தொடர்புகளை பல்வேறு துறைகளினூடாக வலுப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்களையும் தெளிவுபடுத்தினார்.

மேலும் ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பில் கம்போடிய பிரதமர் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்தார்.

தலைவர்களினது சந்திப்பைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கிடையிலான புதிய இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அரசியல் ஆலோசனை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க கைச்சாத்திட்டதுடன், கம்போடியா சார்பாக கம்போடிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கைச்சாத்திட்டார். இருநாடுகளுக்கிடையில் தேசிய கவுன்சில் ஒன்றை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தில் இருநாட்டு வர்த்தக சபைகளின் தலைவர்கள் கைச்சாத்திட்டனர். (ஐ)

# ஜம்மு-காஷ்மீர் பிரிக்கப்பட்டதை வரவேற்கின்றன பௌத்த பீடங்கள்

கொழும்பு, ஓக. 10

**ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தைப் பிரித்து, லடாக் யூனியன் பிரதேசத்தை இந்திய அரசு உருவாக்கியிருப்பதற்கு இலங்கையின் முக்கியமான பௌத்த பீடங்களின் மகா நாயக்க தேரர்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.**



பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட 'லடாக்' பிராந்தியத்தை, தனி மாநிலமாக அறிவிக்க இந்திய அரசு எடுத்த முடிவை, ஒரு பௌத்தநாடாக இலங்கை பெரிதும் பாராட்டுகின்றது.

இது இரு நாடுகளுக்கும் இடையிலான மத, அரசியல் மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்தும். அவர்களை உயர்ந்த இடத்துக்கு கொண்டு செல்லும் என, சியாம் நிக்காயவின் மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்கள் வெளியிட்டுள்ள தனித்தனியான இரு அறிக்கைகளில் கூறியுள்ளனர்.

மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பன்மைத்துவச் சமூகத்தைக் கொண்டிருந்த இந்தியா, நல்லிணக்கத்தைப் பாதுகாத்து வருகிறது. 70 சதவீத பௌத்தர்களைக் கொண்ட லடாக்கை ஒரு தனி மாநிலமாக அறிவிக்க முடிவுசெய்திருப்பது ஒருபௌத்த நாடான இலங்கைக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் ஏற்படுத்தியுள்ளது எனக் கூறியுள்ளார்.

அதேவேளை, லடாக்கை ஒரு தனி மாநிலமாக அறிவிக்கும் முடிவை மிகவும் பாராட்டுவதாகக் கூறியுள்ள அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர், வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர், லடாக் பகுதிக்கு யாத்திரை செல்லும் உலகெங்கிலும் உள்ள பௌத்தர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# சஹ்ரான் வலையமைப்பின் 100 கோடி ரூபா சொத்துகளும் ரூ. 13 கோடி பணமும் முடக்கம்

கொழும்பு, ஓக. 10

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் காசிமின் 100 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் 13 கோடி ரூபா வங்கி வைப்புக்களும் முடக்கப்பட்டுள்ளன எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபயசேகர இந்தத் தகவலை ஊடகவியலாளர்களுக்கு நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரி சஹ்ரான் காசிமின் கீழான தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு உள்ளிட்ட வலையமைப்பினால் பராமரிக்கப்பட்ட 100 கோடி ரூபா சொத்துக்களும் 13 கோடி ரூபா வங்கி வைப்புக்களுமே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தாக்குதல்களின் பின்னர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் 63 சந்தேகநபர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இந்த சொத்துக்களும் பணமும் முடக்கப்பட்டன என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

எனினும் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் காசிமின் 700 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் 14 கோடி ரூபா வங்கி வைப்புக்களும் முடக்கப்பட்டன என்று கடந்த மே மாதம் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடும் காற்று குறைவடையும்

நாட்டிலும் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளிலும் தற்பொழுது காணப்படும் காற்றுடன் கூடிய நிலை அடுத்த சில நாள்களில் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் திருகோணமலை, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும் (குறிப்பாக பிற்பகலிலும் இரவிலும்) காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 60 தொடக்கம் 65 கிலோ மீற்றர் வரையும் அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# 'நோ போல்' பிடிக்கும் அதிகாரத்தை 3 ஆவது நடுவருக்கு வழங்கத் திட்டம்!



பந்துவீச்சாளர்களின் கால் 'நோ போல்' பிடிக்கும் அதிகாரத்தை மூன்றாவது நடுவருக்கு வழங்குவதற்கு சர்வதேச கிரிக்கெட் திட்டமிட்டுள்ளது.

இதன்படி அடுத்த ஆறு மாத காலத்தில் தேர்வு செய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டித் தொடர்களில், கள நடுவருக்கு பதில் தொலைக்காட்சி நடுவர் கோட்டைத் தாண்டி முன் காலை வைப்பது தொடர்பில் நோ போல் பிடிக்கவுள்ளார்.

இது குறித்து, ஐ.சி.சியின் கிரிக்கெட் செயற்பாட்டு பொது முகாமையாளர் ஜெப் அல்லார்டிக் கூறுகையில்,

ஒரு சில வினாடிகளில் முன் கால் வைக்கப்பட்ட படம் மூன்றாவது நடுவருக்கு வழங்கப்பட ஆலோசிக்கப்பட்டுள்ளது. அவர் நோ போல் வீசப்பட்டதாகக் கள நடுவருக்கு அறிவுறுத்துவார். அவ்வாறு அழைக்கப்படாத பட்சத்தில் ஆடப்படும் அனைத்துப் பந்துகளும் சரியான பந்துகளாக அமையும்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் அனைத்து இடங்களிலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது சாத்தியமா என்பதில் சந்தேகம் நீடிக்கிறது. எனவே, முதல் கட்டமாக அடுத்த ஆறு மாதங்களில் நடைபெறும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் மட்டும் இந்தத் திட்டம் பயன்படுத்தப்பட உள்ளது. இந்தப் புதிய அணுகுமுறை கைகொடுத்தால், அதை அப்படியே தொடர்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதனை அனைத்து ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளிலும் பயன்படுத்த கிரிக்கெட் குழு பரிந்துரைத்துள்ளது. ஆண்கள் சர்வதேச கிரிக்கெட்டில் இந்த இருவடிவங்களிலும் 2018ஆம் ஆண்டு சுமார் 84,000 பந்துகள் வீசப்பட்டுள்ளன. எனவே, அனைத்து வெவ்வேறான இடங்களிலும் ஒவ்வொரு பந்தினதும் நோ போலை கண்காணிப்பது பெரும் பயிற்சியாகும். அனைத்து போட்டிகளிலும் இதனை அமுல்படுத்துவதற்கு முன்னர் அனைத்து சவால்களையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும் எனக் கூறினார்.

கடந்த 2016ஆம் ஆண்டு இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தானுக்கு இடையிலான ஒருநாள் போட்டித் தொடரில் ஒரு பரீட்சார்த்த முயற்சியாக இந்த முறை பயன்படுத்தப்பட்டபோதும் அது தொடர்ந்து முன்னெடுக்கப்படவில்லை.

இந்த முறை அப்போது பயன்படுத்தப்பட்டபோது கால் தரையில் பட்டது மற்றும் தொலைக்காட்சி நடுவர் மூலம் தீர்மானிப்பதற்கு இடையே சராசரியாக ஏழு வினாடிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்த முடிவு விரைவாக எடுக்கப்படுவது குறித்து ஐ.சி.சி திருப்தி அடைந்தபோது, தீர்க்கமான சில சந்தர்ப்பங்களில் முடிவெடுப்பதில் சற்று தாமதம் ஏற்பட்டிருந்தது. அதனை தொலைக்காட்சி நடுவர்கள் அதிகமாக பயன்படுத்தும்போது இந்த செயல்முறை வேகம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அண்மைக் காலமாக நோ போல் விவகாரம் அதிக சர்ச்சைகளை ஏற்படுத்தி வரும் நிலையிலேயே ஐ.சி.சி. இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கேப்ரியல் ஜீசஸ்க்கு தடை!



பிரேஸில் உதைபந்து அணியின் நட்சத்திர வீரரான கேப்ரியல் ஜீசஸ்க்கு 2 மாதங்கள், போட்டிகளில் விளையாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மைதானத்தில் அத்துமீறிச் செயற்பட்ட காரணத்தால் அவருக்கு தென்அமெரிக்க உதைபந்துக் கூட்டமைப்பு இந்தத் தடையை விதித்துள்ளது.

பிரேஸிலில் கடந்த மாதம் நடந்த கோபா அமெரிக்கா உதைபந்து போட்டியின் இறுதிப் போட்டியில், பிரேஸில் அணி 3-1 என்ற கோல் கணக்கில் பெருவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது.

இப்போட்டியின்போது, 70ஆவது நிமிடத்தில் பிரேஸில் அணி வீரர் கேப்ரியல் ஜீஸஸ் ஆக்ரோஷமாக விளையாடியதன் விளைவாக, அவருக்கு நடுவரால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இந்த விரக்தியுடன் மைதானத்தை விட்டு வெளியேறிய கேப்ரியல் ஜீசஸ், போட்டி அதிகாரிகள் உட்கார அமைக்கப்பட்டு இருந்த தற்காலிக 'டக்-அவுட்' மற்றும் வீடியோ உதவி நடுவருக்காக வைக்கப்பட்டு இருக்கும் திரையை உதைத்துத் தள்ளினார்.

இதனால், கடும் விமர்சனத்திற்கு உள்ளான கேப்ரியல் ஜீசஸ், பிறகு நடந்த சம்பவத்துக்காக மன்னிப்புக் கோரினார்.

எனினும், இந்தப் பிரச்சினை குறித்து விசாரணை நடத்திய தென்அமெரிக்க கால்பந்து கூட்டமைப்பு, கேப்ரியல் ஜீசஸ்க்கு சர்வதேச போட்டிகளில் 2 மாதம் விளையாடத் தடை விதித்ததோடு, 30,000 அமெரிக்க டொலர்கள் அபராதமும் விதித்தது.

மேலும் ஒழுங்கு விதிமுறையை மீறியதாக பிரேஸில் உதைபந்து கூட்டமைப்புக்கு 15,000 அமெரிக்க டொலர்கள் அபராதமாகவும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தை மேன்முறையீடு செய்ய கேப்ரியல் ஜீசஸ்க்கு, ஒரு வாரம் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், தேசிய அணியுடன் உத்தியோகபூர்வ மற்றும் நட்புரீதியான போட்டிகளில் விளையாடும் வாய்ப்பினை, 22 வயதான கேப்ரியல் ஜீசஸ் இழக்கிறார். (ஐ)

# கிங்ஸ் லெவன் பஞ்சாப் பயிற்சியாளர் விலகல்!



இந்தியாவில் நடைபெறும், ஐ.பி.எல். ரி-20 தொடரில் விளையாடும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைமை பயிற்சியாளராக செயற்பட்டு வந்த மைக் ஹெஸ்சன், பயிற்சியாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இதுவரை ஐ.பி.எல். ரி-20 தொடரில், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி பெரிதளவில் சாதிக்காத நிலையில், மைக் ஹெஸ்சன், இரண்டு வருட ஒப்பந்தத்தில் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

எனினும், அவரால் அணியை சிறந்த தொரு நிலைக்கு கொண்டுவர முடியவில்லை. 2019ஆம் ஆண்டு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியால், ஆறாவது இடத்தை மட்டுமே பெற முடிந்தது.

இதனால், ஒப்பந்தம் முடிவதற்கு முன்னதாகவே மைக் ஹெஸ்சனே முன்வந்து, தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தனது பதவி விலகல் குறித்து அவர் கூறுகையில், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியுடன் ஒரு வருடமாக சந்தோசமாக வேலைப்பார்த்தேன். அவர்கள் என்னை தலைமை பயிற்சியாளராக்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வருடம் அணியை சிறப்பான நிலைக்கு கொண்டு போக முடியவில்லை என்பது ஏமாற்றமே. பஞ்சாப் அணி கிண்ணத்தை வெல்வது மிகத் தொலைவில் இல்லை. வருங்காலத்தில் சிறப்பாக விளையாட வாழ்த்துகிறேன்' என கூறினார்.

நியூசிலாந்து அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த மைக் ஹெஸ்சன், 2015 ஆம் ஆண்டு நியூஸிலாந்து அணி, உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி வரை முன்னேறுவதற்கு மிக முக்கிய காரணமாவார்.

அத்தோடு, கிரிக்கெட் உலகில் அவர் சிறந்த பயிற்சியாளராகவும் பார்க்கப்படுகின்றார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பொறுப்புக்கான இறுதிப் பட்டியலின் 3 நபர்களில் மைக் ஹெசன் பெயரும் உள்ளது.

இதேபோல, பாகிஸ்தான் அணியும் பயிற்சியாளர் பொறுப்புக்கான நபரை தேர்வு செய்ய அழைப்பு விடுத்துள்ள நிலையிலும், பங்களாதேஷ் பயிற்சியாளர் போட்டியில் மைக் ஹெஸ்சன் பெயர் ஏற்கெனவே அடிபடுவதாலும் அவர் கிங்ஸ் லெவன் பஞ்சாப் பயிற்சியாளர் பொறுப்பிலிருந்து விலகுவதாக முடிவெடுத்ததாகத் தெரிகிறது.

# போட்டியின் இடையில் கேக் வெட்டினார் வில்லியம்சன்!





இலங்கை கிரிக்கெட் தலைவர் அணிக்கும், நியூசிலாந்து அணிக்குமிடையிலான பயிற்சி ஆட்டத்தின் இடையில், நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சனின் பிறந்தநாள் கொண்டாட்டம் நடந்த சுவாரஷ்யம் இடம்பெற்றுள்ளது.

ஆட்டம் நடந்து கொண்டிருந்த போது, இலங்கை ரசிகர்களுடன் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடினார் வில்லியம்சன்.

நேற்றுமுன்தினம் கேன் வில்லியம்சனின் 29ஆவது பிறந்தநாள்.

இலங்கைக்குப் பயணம் செய்துள்ள நியூசிலாந்து அணி, இலங்கை தலைவர் பதினொருவர் அணியுடன் கட்டுநாயக்கவில் 3நாள் பயிற்சி ஆட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. இதன் போது, பார்வையாளர் பக்கமிருந்த இலங்கை ரசிகர்கள், கேக் வெட்டத் தயாரானபோது, மைதானத்தில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த வில்லியம்சன் அவர்கள் பக்கம் வந்து கேக் வெட்டி ரசிகர்களுக்கு ஊட்டி விட்டார். (ஐ)

## பிரபாகரனுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்வெட்டித்துறையில் அமைக்கப்பட்ட ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவு நீச்சல் தடாகம் திறப்பு விழா நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக நிதி அமைச்சர் மங்கள சமரவீர பங்கேற்று நீச்சல் தடாகத்தைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றும்போதே சுமந்திரன் எம்.பி. புலிகளின் தலைவர் பிரபாகரனை அவரது பெயரை நேரடியாகக் குறிப்பிடாமல் புகழ் பேசினார்.

இதனால் அந்த நிகழ்வில் பெரும் கரகோசம் எழுந்தது வல்வெட்டித்துறையின் இரண்டு சாதனையாளர்களில் ஒருவர் ஆழிக்குமரன் ஆனந்தன் எனக் குறிப்பிட்ட சுமந்திரன் எம்.பி. மற்றைய சாதனையாளர் என விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனையே சூசகமாகக் குறிப்பிடுகின்றார் என்பது நேற்று அந்த நிகழ்வில் பங்கேற்றிருந்த எல்லோருக்கும் நன்கு புரிந்திருந்தது. இதனால் சுமந்திரனின் உரையின்போது பெரும் கரகோஷம் எழுந்தது. அமைச்சர் மங்கள சமரவீர முன்னிலையில் அவர் இதனைக் குறிப்பிட்டதால் பக கோஷம் பன்மடங்கானது.

அந்த நிகழ்வில் உரையாற்றிய சுமந்திரன் எம்.பி. தெரிவித்தவை வருமாறு:-

ஆழிக்குமரன் ஆனந்தன் ஒரு உலகசாதனையாளன். உலக சாதனைகள் படைத்தவர்கள் வல்வெட்டித்துறை மண்ணில் இருந்து தான் வந்திருக்கின்றார்கள். சில கின்னஸ் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. மற்றைய ஒரு சாதனையாளரின் சாதனைகள் பல்வேறு வடிவங்களில் எழுத்தில் - படத்தில் வரையப்பட்டிருக்கின்றன. சாதனைக்குப் புகழ்போன வல்வை மண்ணில் இன்றைக்குச் சரித்திரப் புகழ் பெறும் இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது. ஆனந்தன் மறைந்து 25 வருடங்களுக்குப் பின்னர் இப்படியான ஒரு நிகழ்வு இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அவர் செய்த பல உலக சாதனைகளைச் சிறுவனாக நேரில் கண்டவன் நான். நீச்சல் தடாகத்தில் பல மணி நேரம் நீந்தியதைப் பார்த்தேன். எங்கள் பாடசாலை நீச்சல் தடாகத்தில்தான் அதனைச் செய்தார். ஒவ்வொரு நாளும் நான் சென்று பல மணி நேரம் அவரைப் பார்த்திருக்கிறேன். காலிமுகத்திடலுக்கு முன்பதாக ஒரு மேடையை அமைத்து அவர் நீண்ட நேரம் நடனமாடிக் கொண்டிருந்தபோது ஒரு சிறுவனாக அவரோடுகூட நடனமாடியவன் நான். ஒற்றைக்காலிலே நின்றும் மெதுவாக நடந்தும் இன்னும் பல கின்னஸ் புத்தகத்தில் எழுதப்படதவித்தியாசமானசாதனைகளை அவர் புரிந்தார். அதில் பலவற்றை நேரில் கண்டு வியந்தோம்.

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு ஆனந்தனின் மாமனார் நவரட்ணசாமி நீந்திக் கடந்திருக்கிறார். ஆனந்தனும் அதனைச் செய்தார். ஆங்கிலக் கால்வாயைக் கடக்கவேண்டுமென்பது அவருடைய நீண்ட கால ஆசை. ஒரு பாரிய வீதி விபத்தில் சிக்கி உடல்நலக் குறைவாக இருந்தபோதிலும் நீண்ட நாட்களாக செய்ய விருந்ததைச் செய்யவேண்டுமென்ற வைராக்கியத்தோடு ஆங்கிலக் கால்வாயைக் கடக்க முற்பட்டபோதுதான் அவர் மரணத்தை எய்தினார்.

இப்படியான ஒருவர் இந்த மண்ணிலே உதித்தவர் எம் மத்தியில் வாழ்ந்தவர். உலக சாதனைகள் ஒன்று இரண்டு என்று அல்லாமல் ஏழு எழுதப்பட்டுள்ளது. அதற்கு மேலாகவும் பலவற்றைச் செய்தவர். அவருக்கு மதிப்பளிக்கும் வகையிலே இந்த நீச்சல் தடாகம் கொடுக்கப்படுகிறது. நிதி அமைச்சர் இந்த விடயத்தில் தனது தனிப்பட்ட கரிசனையை எடுத்திருக்கின்றார். ஏனென்றால் அவர் ஆழிக்குமரன் ஆனந்தனின் குடும்பத்து உறவினர். அவருடைய மாமி முறையானவர் தான் திருமதி ஆனந்தன்.

இந்தத் தருணத்திலே நிதி அமைச்சரிடம் முக்கியமான வேண்டுகோளை நான் விடுக்க விரும்புகின்றேன். இந்த நாட்டில் நாட்டுத்தலைவர்களை உருவாக்குகின்றவர் என்ற பெருமையைக் கொண்டவர் நிதி அமைச்சர். அவர் நாட்டுத் தலைவர் ஆகுவதில்லை. ஆனால் நாட்டுத் தலைவரை உருவாக்குவதில் அவர் தான் முதன்மையானவர் என்ற பெருமையைக் கொண்டவர். இன்னொரு தலைவருக்கான போட்டி அண்மித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் அவருடைய பங்களிப்பு இப்பொழுது முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

எனது உரையின் ஆரம்பத்தில் இந்த மண்ணில் இருந்து தோன்றிய இரண்டு சாதனையாளர்களைப் பற்றிச் சொன்னேன். அதில் ஒருவருக்காக இந்த நீச்சல் தடாகம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மற்றவரைப் போன்ற இன்னொருவர் எங்கள் மத்தியில் இருந்து எழுவாரா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது தெற்கில் இருக்கின்ற நீங்கள். உங்கள் அரசியலும் நீங்கள் உருவாக்கும் அரச தலைவர்களும் தான் அப்படியான தொன்றுஇனிநடக்குமாஇல்லையா என்பதைத் தீர்மானிப்பதாக இருக்கும். ஆகையால் நிதானமாகச் செயற்பட்டு நாங்கள் பழைய நினைவுகளோடு மட்டும் இந்தச் செயற்பாடுகளோடு தொடர்ந்து எதிர்காலத்தில் பயணிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (ஜ-07)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு வெற்றி பெறக்கூடிய வேட்பாளர் ஒருவரையே நாங்கள் விரைவில் பெயரிடுவோம் என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த அமைச்சர் மங்கள சமரவீர வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவோம். அவ்வாறு வெற்றி பெறக்கூடிய வேட்பாளர் ஒருவரை நாங்கள் விரைவில் பெயரிடுவோம். ஆனால் உண்மையில் எங்களுக்குப் பல தரப்பட்ட கருத்துக்கள், எண்ணங்கள் இருக்கலாம். ஆனால் அவ்வாறு பெற்றி பெறக் கூடிய வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தான் என்று நாங்கள் உண்மையில் நினைக்கின்றோம்.

ஆயினும் அப்படியாக ஒரு தீர்மானத்தை இதுவரை எடுக்கவில்லை. ஏனெனில் அந்தத் தீர்மானத்தை எடுக்கவேண்டியது நாடாளுமன்றக் குழுவும் செயற்குழுவுமே தான். அதனடிப்படையில் நாடாளுமன்றக் குழுவும் செயற்குழுவும் கூடி அங்கு பெரும்பான்மையானவர்கள் என்னத்தைச் சொல்கின்றனரோ அதனைத் தான் கட்சி செய்யும் - என்றார். (ஜ-07)

## மைத்திரி, ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடுமையாக முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டங்களிலும் திட்டங்களை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளார்.

அத்துடன், அவர் நல்லூர் கந்த சுவாமி ஆலயத் திருவிழாவிலும் பங்கேற்று வழிபாடுகளில் ஈடுபடுவார் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் 23ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து திருக்குறள் பெருவிழாவை ஆரம்பித்துவைக்கவுள்ளார். அத்துடன், பருத்தித்துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான அடிக்கல் நட்டு வைத்தல், யாழ். குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தல், மயிலிட்டித் துறைமுகத்தை அபிவிருத்தியின் பின் மக்களிடம் கையளித்தல் உள்ளிட்ட பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களின் ஆரம்ப நிகழ்வுகள் மற்றும் மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்க உள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இரண்டு நாள்களுக்கு மேல் தங்கியிருக்கத் திட்டமிட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்த திருவிழாவில் பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் இரண்டு முக்கிய தலைவர் அடுத்தடுத்த வாரங்களில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதால் குடாநாட்டின் பாதுகாப்பு நடவடிக்கை கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்துக்கான வருகையை பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து ஜனாதிபதி கைவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-07)

## முதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டணியை அமைக்கவேண்டும் என கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

விசேட அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் ஜனநாயக தேசிய முன்னணியைக் கூடிய விரைவில் அமைக்கப் பிரதமர் ரணிலும் அமைச்சர் சஜித்தும் இணக்கம் தெரிவித்துள்ளதாக நேற்றுச் செய்திகள் வெளியாகி இருந்த நிலையில் சஜித்தின் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வாறானஒருகூட்டணியை அமைக்கத் தான் நூற்று நூறு அல்ல நூற்றுக்கு இலட்சம் முறை இணக்கம் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதுடன் பிற கட்சிகளின் கொள்கைகள் அடிப்படையில் ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்த பின்னரே கூட்டணி அமைக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது தன்னுடைய தனிப்பட்ட கருத்து எனவும் அவ்வாறு செய்தால் மாத்திரமே மேலும் கட்சிகள் இணைந்து வெற்றி கூட்டணியாக அமையும் எனவும் அவர் கூறியுள்ளார். (ஜ)

## கொக்குவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்த தளபாடங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை சேதப்படுத்தி அடாவடியில் ஈடுபட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 9.30 மணியளவில் நடந்துள்ளது.

பொற்பதி வீதியில் முதலாம் ஒழுங்கையில் உள்ள அரச உத்தியோகத்தரின் குடும்பம் வசிக்கும் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட கும்பலே தாக்குதலை நடத்தியதுடன், வீட்டில் உள்ளவர்களை அச்சுறுத்தி விட்டுத்தப்பிச்சென்றதுஎன்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதேவேளை, யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் ஜன்னல் கதவுகள் மற்றும் இரும்புக் கதவுகள் என்பன நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் அடித்துச் சேதம் ஆக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சனசமூக நிலையத்தின் தலைவரினால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-07)

## மூன்று மாதிரிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ நேற்றுப் பயனாளிகளிடம் கையளித்தார்.

செவட்ட செவன திட்டத்தின் கீழ் வவுனியா பிரதேச செயலர் பிரிவில் கத்தார் சின்னக்குளத்தில் சபரிபுரம், அகத்தியர்புரம் ஆகிய மாதிரிக் கிராமங்களும், வெண்கலச் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் பாவற்குளத்தில் கலைமகள் நகர் ஆகிய மாதிரிக் கிராமமும் இவ்வாறு மக்களிடம் கையளிக்கப்பட்டன.

ஒவ்வொன்றும் ஐந்து லட்சம் பெறுமதியான 52 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டன. அத்துடன் தோட்டச் செய்கைக்கான கடன்கள், வாழ்வாதார உதவிகள், மாணவர்களுக்கான உதவித் திட்டங்கள் என்பனவும் இதன்போது வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், தேசிய வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், வவுனியா பிரதேச செயலாளர், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர், ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர், கட்சி ஆதரவாளர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-100)

## கோட்டாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மொறட்டுவைப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியைத் தனதாக்கக் கூடிய வகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய கூட்டணி அமையும்.

அந்தவகையில் எதிரணியில் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய, நிறுத்தப்படுவாராயின் மிக்கச் சந்தோசம். நாம் அவருக்கு எதிராக போட்டியிடுவதற்குத் தயாராகவே உள்ளோம்.

எமது கட்சியைச் சேர்ந்த சிலர் கோட்டாவைச் சந்தித்ததாகக் கூறும் ஊடகச் செய்திகள் உண்மையானவை அல்ல.

எமது கட்சி சார்பில் போட்டியிடவுள்ள ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரிய, சரத் பொன்சேகா ஆகியோரின் பெயர்களே பெரும்பாலானோர்களால் முன்மொழியப்பட்டுள்ளது - என்றார். (ஜ)

## சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் கூடியபோது, பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவும், பிரதமர் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவும் பெயரிடப்பட்டு அறிவிக்கப்படவேண்டும் என்று இதன்போது அவர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

அத்துடன், தேர்தலுக்கான கட்சியின் பிரசாரப் பணிகள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ விடம் ஒப்படைக்கப்படவேண்டும் எனவும் இதன்போது தீர்மானித்துள்ளனர்.

சுமார் 30 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவில் 26 உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர் எனவும், கலந்துகொள்ள முடியாத உறுப்பினர்களும் இதற்குத் தமது இணக்கத்தை வெளியிட்டனர் என்றும் கூட்டத்தில் கலந்துகொண்ட எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்க இழுத்தடித்து வரும் நிலையில், ஐ.தே.க. பின்வரிசை உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இதேவேளை, சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கவேண்டும் எனக் கையெழுத்திடும் மகஜர் ஒன்றும் ஐ.தே.க. உறுப்பினர்களால் தயாரிக்கப்பட்டு வந்த நிலையில், சில முக்கிய உறுப்பினர்களை மட்டும் நேற்றுக் காலை அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசியுள்ளார்.

ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் வெற்றி பெறும் பட்சத்தில் அந்தக் கட்சியின் தலைவர் பதவியும் கட்சி யாப்பின்படி புதிய ஜனாதிபதிக்கே வழங்க நேரிடும். இதனால் கட்சித் தலைமைத்துவத்தைக் காத்துக் கொள்வதில் ரணில் விக்கிரமசிங்க காய் நகர்த்தி வருவதால், ஜனாதிபதி வேட்பாளரைப் பெயரிடுவதில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இழுபறி நிலை நீடிக்கிறது.

இந்த நிலையில், பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தலைமைக்கு அழுத்தம் கொடுப்பதற்காக இன்று காலை கூடி சஜித் பிரேமதாசவை பெயரிட வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதாக அந்தக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

எஸ்.எம். மரிக்கார், லக்ஸ்மன் விஜேமான்ன, ஹேசா விதானகே, சுமிந்த விஜேசிறி, இம்ரான் மஹ்ரூப், கே.கே.பியதாஸ, விஜேலால் ஹெட்டியாராச்சி, ஏ.விஜயதுங்க, சிட்னி ஜயரத்ன, பந்துலலால் பண்டாரிகொட, ரோஹிணி கவிரத்ன, துசார இந்துனில் உள்ளிட்ட 26 பின்வரிசை உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர். (ஜ)

# கொப்பேக்கடுவவுக்கு அராலியில் அஞ்சலி





யாழ்ப்பாணம், ஓக. 10
அராலித்துறையில் விடுதலைப்புலிகளின் கண்ணி வெடித் தாக்குதலில் உயிரிழந்த அப்போதைய வட பிராந்திய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவவின் 27வருட நினைவு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

அராலித்துறையில் அமைக்கப்பட்டுள்ள கொப்பேக் கடுவ நினைவுத் தூபியில், யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் நடந்தன.

இந்தத் தாக்குதலில் மேஜர் ஜெனரல் விமல விஜேரத்ன, ரியர் அட்மிரல் மொஹான் ஜயகம, கேணல் எச்.பி.ஸ்டீவன், கேணல் வை.என்.பலிபான, கேணல் ஜி.எச்.ஆரியரத்ன, லெப்.கேணல் நளின் த அல்விஸ், லெப்.கொமாண்டர் அசங்க லங்காதிலக, லெப்.கொமாண்டர் சி.பி.விஜேபுர ஆகியோரும் உயிரிழந்திருந்தனர்.

இந்த அஞ்சலி நிகழ்வில் 52ஆவது படையணி தளபதியும், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர் என இராணுவம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேட்பாளராகச் சவால்களை சஜித் எதிர்கொள்ள நேரிடும்

## மத்திய மாகாண ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 10
ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் நியமிக்கப்படவேண்டுமானால் அவர் பலவித சவால்களுக்கும் போராட்டங்களுக்கும் முகம் கொடுக்க நேரிடுமென மத்திய மாகாண ஆளுநர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் கட்சியிலுள்ள மற்றுமொருவருக்கு வேட்பாளர் தகுதியை விட்டுக்கொடுக்காது.

ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றைப் பார்த்தோமேயானால், ஜனாதிபதி தேர்தல் ஒன்று அண்மிக்கும் சந்தர்ப்பத்தில் வேட்பாளர் தெரிவில் பலவித முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வது வழமை ஆகும்.

இதனால் சஜித் பிரேமதாஸ பல போராட்டங்களை எதிர்கொண்டால் மாத்திரமே ஜனாதிபதி வேட்பாளராவதற்கான வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும் – என்றார்.

## பிரகீத் எக்னெலிகொட கடத்தல் வழக்கு; ட்ரயல் அட் பார் அமைக்கக் கோரிக்கை

கொழும்பு, ஓக. 10
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைக்காக மூவரடங்கிய நீதிபதிகள் குழுவை (ட்ரயல் அட் பார்) நியமிக்குமாறு சட்டமா அதிபர் நீதியரசரிடம் கோரியுள்ளார்.

ஹோமாகம மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரணை செய்வதற்காக இந்த மூவரடங்கிய நீதிபதிகள் குழுவை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளர் அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி, இரவு 8 மணியளவில் கொழும்பு-கொஸ்வத்தை என்ற இடத்தில் வைத்து, பிரகீத் எக்னெலிகொட காணாமல்போனார் எனப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த 2010ஆம் ஆண்டு இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடப்பதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தது.

பிரகீத் எக்னெலிகொடவை அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த தரப்பினரே கடத்தினர் என அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றார். ஆனாலும் இந்தக் குற்றச்சாட்டுகளை மஹிந்த தரப்பினர் மறுத்து வருகின்றனர்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போன நாள் முதல் இன்று வரை பன்னாட்டு நிறுவனங்கள், சுயாதீன அமைப்புக்கள் அவருக்காகக் குரல் கொடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.தே.கவிலிருந்து பொது வேட்பாளர்

### எரான் விக்ரமரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஓக. 10
ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தே பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவார். அதில் எந்தவொரு மாற்றமும் இல்லையென அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

மொறட்டுவவில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் இன்னும் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யவில்லை. மேலும் எமது கட்சிக்குள் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கென ஓர் அமைப்பு உள்ளது.

அத்துடன் கட்சியின் செயற்குழு மற்றும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு அதனடிப்படையிலேயே ஜனாதிபதி வேட்பாளரைத் தேர்ந்தெடுப்போம்.

ஐக்கிய தேசியக் கட்சியிலேயே ஜனநாயகம் எப்போதும் உள்ளது – என்றார். (ஐ)

## வறட்சியால் 6 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் பாதிப்பு

கொழும்பு, ஓக. 10
வறட்சி காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 58 ஆயிரத்து 696 ஆக அதிகரித்துள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

2 இலட்சத்து 24 ஆயிரம் பேர் வடக்கு மாகாணத்திலும், 1 இலட்சத்து 63 ஆயிரம் பேர் கிழக்கு மாகாணத்திலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 63 ஆயிரம் பேர் வட மேல் மாகாணத்தில் வறட்சியால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

பாதிக்கப்பட பகுதியில் உள்ள மக்களுக்கு தேவையான குடிதண்ணீரை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். (ஐ)

## ஜப்பானில் இலங்கையருக்கு 10 வருடங்கள் விசா அனுமதி

கொழும்பு, ஓக. 10
ஜப்பானில் வேலைவாய்ப்பு பெறும் இலங்கையர்களுக்கு 10 வருட விசா அனுமதி வழங்கப்படுமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜப்பான், இலங்கையர்களுக்கு வழங்கியுள்ள சந்தர்ப்பம் சீராகப் பயன்படுத்தப்படவேண்டும். இதனால் பயிற்சி பெற்றவர்களை தொழில்வாய்ப்புக்காகத் தெரிவு செய்ய முன்னுரிமை வழங்கப்படுமென அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

## புதையல் தோண்டிய நால்வர் கைது

கொழும்பு, ஓக. 10
வெள்ளவாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொடவெஹகல பகுதியில் உள்ள காட்டில் புதையல் தோண்டிய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பூஜையொன்றை நடத்திவிட்டு இந்தப் புதையல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் பூஜைக்குப் பயன்படுத்திய பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெள்ளவாய, பசறை மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 37,41,46 மற்றும் 52 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## குருநாகல் நகர முதல்வருக்கு விளக்கமறியல்

குருநாகல் மேல் நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்படும் வழக்கொன்றில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாதமை குறித்து பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த குருநாகல் நகர முதல்வர் துஷார சஞ்சீவ எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குருநாகல் மேல் நீதிமன்றத்தில் அவரை நேற்று முன்னிலைப்படுத்தியபோதே நீதிபதி மேனகா விஜேசுந்தர இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.08.2019 இல் வெளியிடப்பெற்றது.